**கவனிக்க.-** *19.10.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1782 - 2012 ඔක්තෝබර් මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.10.25

*1782 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1468 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1478 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | 1484 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.

# பதவிகள் — வெற்றிடம்

### பன்வில பிரதேச சபை

மத்திய மாகாண அரச சேவையில் பன்வில பிரதேச சபையில் நிலவும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பதவிகளின் ஆட்சேர்ப்புக்காக இந்த அறிவித்தல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டுள்ள பன்வில பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்பட்டுள்ள விண்ணபத்திற்கேற்ப தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரம் 2012.11.09 ஆந் திகதிக்கு முன்னதாக செயலாளர் பன்வில பிரதேச சபை பன்வில என எழுதி பதிவு தபாலில் அனுப்ப வேண்டும்.

**அட்டவணை**

| பதவிப்பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வித் தகைமைகள்/ஏனைய தகைமைகள் மற்றும் அனுபவங்கள் |
|---|---|---|---|
| வீதித் தொழிலாளர்கள் | 02 | 06/2006 ஏ - ரூ. 11,730-10 x 120-10 x 130-10 x 145-12x160-ரூபா 17,600 | இருதடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விச் சான்றிதழ் பரீட்சையில் (சா. த.) சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் |
| சுகாதார தொழிலாளர்கள் | 02 | PL 1-2006ஏ ரூ. 11,730-10 x 120-10 x 130-10 x 145-12x160- ரூபா 17,600 | ஆகக்குறைந்தது தரம் 8 இல் (ஆண்டு 9 இல்) உரிய பாடத் திட்டத்தை நிறைவு செய்திருத்தல் வேண்டும் |
| வாகன ஓட்டுனர் | 01 | PL 3-2006ஏ ரூ. 12,740-10 x 130-10 x 145-12x160-12 x 170 - ரூபா 18,860 | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விச் சான்றிழ் பரீட்சையில் (சா.த.) இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>மோட்டார் வாகன ஆணையாளர் வழங்கிய தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருத்தல். அனுபவம் பற்றிய அனுமதிப் பத்திரம் C, CI, D, DI தொகுதி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>அல்லது<br><br>பகல், இரவு காலங்களில் சேவையில் ஈடுபடு வதற்குரிய உடல்நிலை இருத்தல் வேண்டும். சிறந்த கண்பார்வையும் இருத்தல் வேண்டும். ஆகக்குறைந்தது 62.5 அடி உயரம் கொண் டிருத்தல் வேண்டும். |

**02. ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள் .-** (1) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) விண்ணப்பதாரி பன்வில பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;

(4) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 18 வயதிற்குக் குயைாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (ஏற்கனவே அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளோருக்கு இந்த வயதெல்லை பொருந்தாது) ;

(5) குற்றவியல் சட்டக்கோவையின்கீழ், நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டவராகவோ அரச அல்லது மாகாண அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

(6) பன்வில பிரதேச சபையில் தற்போது தற்காலிக, சமயோசித பதிலீட்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவோர் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.

03. **ஆட்சேர்ப்பு முறை** : (1) விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டு தகைமைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் ஆட்சேர்ப்பு நடைபெறும் ;

(2) வாகன ஓட்டுநர் பதவிக்காக திணைக்களத்திலிருந்து ஒரு பிரதிநிதி வாகனப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் அலுவலர் ஒருவர் ஆகியோரைக் கொண்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்டும் வாகனம் செலுத்தும் தேர்ச்சியை அளவீடும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். எழுத்துப் பரீட்சையொன்றிலும் சித்தியடைதல் வேண்டும்.

**04. சேவையில் ஈடுபடுத்தப்படும் நிபந்தனைகள்** : (1) இந்தப்பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதியம் கொண்டவை விதவைகள், அநாதைகள், ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும் ;

(2) தெரிவுசெய்யப்படுவோர் மூன்று வருடகால தகுதிக்கான சேவைக்கு உட்படுவதுடன் உயர்ச்சி பெறுவோர் ஒரு வருட வேலைப் பரிசோதனைக் காலத்துக்கு உட்படுவார் ;

(3) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும், தாபனக் கோவை நிபந்தனைகளுக்கும் நிதிப் பிரமாணங்களுக்கும் அரச திணைக்களங்களது கட்டளைகளுக்கும் மத்திய மாகாண சபை அல்லது பன்வில பிரதேச சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் நியமனங்களுக்கும் அமைய செயற்படுவதற்கு உட்படுதல் வேண்டும் ;

(4) இந்த ஆட்சேர்ப்பின்படி இவ்விதிமுறைகளையும் கருத்தில் கொள்ளாத காரணங்கள் பற்றி பன்வில பிரதேச சபை செயலாளர் தீர்மானமே இறுதி தீர்மானம் ஆகும் ;

(5) தற்போது அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர் தமது திணைக்களத்தின் பிரதானியினூடாக விண்ணப்பிக்க வேண்டும் ;

(6) தேவையான பிணை வைப்புத் தொகையைப் பணமாகவோ அல்லது விதிக்கப்படும் வேறு வகையிலான அவற்றை பிரதேச சபையில் வைப்புச் செய்தல் வேண்டும் ;

(7) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்தும் மாற்றியமைக்கும் அல்லது அறிவிப்பை திருத்தும் இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரங்களும் பன்வில பிரதேச சபை செயலாளருக்கு உண்டு.

5. **விண்ணப்பப்படிவத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள்** : விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களது உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை அனுப்பிவைத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது அவற்றின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்வித் தகைமைகள் சான்றிதழ்கள் ;
(3) பிரதேச செயலாளர் உறுதிப்படுத்திய வதிவிடச் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள் (ஒன்று கிராம அலுவலரால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்);
(5) சேவைச் சான்றிதழ்கள் (தற்போது அரச சேவையில் பணியாற்றுபவர் மாத்திரம்).

தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் பொருள்மயக்கம் ஏற்பட்டால் சிங்கள அர்த்தம் முன்னிலை வகிக்கும்.

செயலாளர்,
பன்வில பிரதேச சபை.

பன்வில பிரதேச சபை அலுவலகம்,
பன்வில,
2012, ஒற்றோபர் 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பன்வில பிரதேச சபை**

**மத்திய மாகாண அரச ........................................................................ பதவி**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. பிறந்த திகதி : ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
6. விண்ணப்பிக்கும் கடைசித் திகதியில் வயது :- வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
7. ஆண்/பெண் :----.
8. விவாகமானவரா/தனித்தவரா? :-----.
9. வம்சாவளியினாலா அல்லது பதிவினாலா இலங்கைப் பிரசை :-----.
10. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களது பிரதிகளை இணைக்க) க. பொ. த. (சாதாரண தரம்) :-----.
    தோற்றிய வருடம் :-----. சுட்டிலக்கம் :------.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

11. (1) ஏனைய கல்வித் தகைமைகள் :-----.
    (2) தொழிற் தகைமைகள் :-----.
    (3) சேவை அனுபவம் :-----.
12. ஏற்கனவே இந்தப் பிரதேச சபையில் பணியாற்றுபவராயின், வகிக்கும் பதவி, நிரந்தர/சமயோசித/தற்காலிக/ஒப்பந்த/பதிலீட்டு அடிப்படை பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
13. நீங்கள் எப்போதாயினும் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா ? :-----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிமொழிகின்றேன். மேற்குறித்த தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரே, தகுதியற்றவராக ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின், நட்டஈடின்றிச் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் அறிவேன்.

---------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :----

**அரச சேவையில் உள்ளோருக்கான சான்றிதழ்**

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ........................................ என்பவர் இந்த நிறுவனத்தில் .......................... ஆகப் பணியாற்றுகின்றார். குறித்த பதவிக்கென அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதமான தண்டனைக்கும் உட்பட்டவரல்ல என்பதை உறுதிப்படுத்தி அவரது விண்ணப்பத்தை விதந்துரைத்து முன்வைக்கின்றேன்.

---------------------,
நிறுவனத் தலைவரது கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
நிறுவனம் :-----.
திகதி :-----.

10-889

## கரன்தெனிய பிரதேச சபை

## தென்மாகாண அரச சேவையில் வெற்றிடம்

கரன்தெனிய பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக தென்மாகாணத்தினுள் வசிக்கும் தகுதியுடைய நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| | பதவி | வெற்றிடம் | சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|
| 01 | வீதித் தொழிலாளி | 01 | ரூ. 11,730-10 x 120-10 x 130-10 x 145-12x160-ரூ. 17,600 06/2006 (IV) படி PL 1-2006 | குறைந்தபட்சம் 5 ஆம் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் |
| 02 | சுகாதாரத் தொழிலாளி | 01 | ரூ. 11,730-10 x 120-10 x 130-10 x 145-12x160-ரூ. 17,600 06/2006 (IV) படி PL 1-2006 | குறைந்தபட்சம் 5 ஆம் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் |
| 03 | ஆயுர்வேத தொழிலாளி | 01 | ரூ. 11,730-10 x 120-10 x 130-10 x 145-12x160-ரூ. 17,600 06/2006 (IV) படி PL 1-2006 | குறைந்தபட்சம் 5 ஆம் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் |

**ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நிபந்தனைகள்** .- (1) விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முந்திய 3 வருட காலத்திற்கேனும் கரன்தெனிய பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட பதவிக்குரிய குறைந்தபட்ச தகைமையினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

(4) கரன்தெனிய பிரதேச சபையில் தற்போது கடமையில் உள்ள அமைய மற்றும் பதிற்கடமையில் உள்ளவர்களுக்கு விஷேட கவனம்/ முன்னுரிமை வழங்கப்படும் ;

(5) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குயைாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (தற்போது அரச சேவை மற்றும் மாகாண அரச சேவையில் உள்ள (பதிற்கடமை, தற்காலிக, ஒப்பந்த அடிப்படை நியமனங்கள் 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.) ;

(6) விண்ணப்பதாரி சிறந்த நற்குணமும், உடல் நலமும் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;

(7) விண்ணப்பம் கோரப்பட்டதன் பின்னர் அல்லது கோரப்படும் காலத்தினுள் அல்லது ஆட்சேர்ப்பை ஒத்திவைத்தல் அல்லது மாற்றங்கள் செய்தல் அல்லது இவவ்றிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்தங்கள் செய்தல் என்பவற்றில் பூரண அதிகாரம் கரன்தெனிய பிரதேச சபைத் தலைவருக்கே உரியது.

(8) தண்டனைச் சட்டக் கோவையின்கீழ், நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு, தண்டனை பெற்றவராக இருக்கக்கூடாது.

**சேவையில் அமர்த்தப்படுத்துவதற்கான நிபந்தனைகள்**.- (1) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும் விதவை, அநாதை நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(2) இந்நியமனம் மூன்றாண்டு தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும் ;

(3) இவ்வாட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் மாறாக இலங்கை அரச தாபனக் கோவையின் விதிகளுக்கும், நிதி ஒழுங்குக் கோவைக்கும், திணைக்களக் கட்டளைகளுக்கும், தென்மாகாண சபை, தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினதும் கரன்தெனிய பிரதேச சபையினால் அவ்வப்போது வெளியிடப்படும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

***விண்ணப்பிக்க வேண்டிய முறை***.- விண்ணப்பப்படிவங்கள், இவ்வறிவித்தலிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A4 (12" × 8") அளவிலான கடதாசியில் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை உரிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 2012.10.30 ஆந் திகதிக்கு முன்னர் " தலைவர், கரன்தெனிய பிரதேச சபை, கரன்தெனிய" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை சேவை நிலை தலைவர்களூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.) குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்துடன் சான்றுப்படுத்தப்பட்ட பின்வரும் ஆவணங்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்:-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) பதிவை உறுதிப்படுத்தும் வாக்காளர் இடாப்பின் பிரதியுடன் அண்மையில் பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளரின் சுருக்கெழுத்து கையொப்பமிடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் ;
(iv) அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம அலுவலர் சான்றிதழ். (பிரதேச செயலாளர் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும்) ;
(v) அண்மையில் பெற்றுக்கொண்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள் ;
(vi) பிற தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(vii) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்.

காமினி அமரவங்ச முனுகொட,
தலைவர்,
கரன்தெனிய பிரதேச சபை.

கரன்தெனிய பிரதேச சபை அலுவலகம்,
கரன்தெனிய,
2012, ஒற்றோபர் 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கரன்தெனிய பிரதேச சபை**

........................................................................ பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கும் பெயர் :----.
2. (அ) நிரந்தர வசிப்பிடம் மாவட்டம் :----.
(ஆ) நிரந்தர முகவரி :----.
3. ஆண்/பெண் :----.
4. (அ) பிறந்த திகதி :----.
(ஆ) விண்ணப்ப இறுதித் திகதிக்கு வயது :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
6. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி :-----.
7. இலங்கைப் பிரசையாவது பிறப்பு மூலமா? பதிவு மூலமா ? :-----.
8. கல்வித் தகைமை :----.
9. நீங்கள் நீதிமன்றத்தால் ஏதாவது குற்றச் செயலுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவரா? அவ்வாறாயின் விபரம்? :----.
10. தொழில் தகைமை மற்றும் அனுபவம் :----.
11. தற்போது பிரதேச சபையில் சேவையாற்றுபவரெனின், சேவைக்காலமும் விபரமும், அந்நியமன வகை (நிரந்தர/தற்காலிக/கொடுப்பனவு/பதிற்கடமை) :----.
12. வேறு தகைமைகள் :----.

13. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையும் என இத்தால் உறுதிமொழிகிறேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமையற்றவனாவேன் என்பதையும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியில் இருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

---------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :----

**விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் இருப்பவரெனில் நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரர் திரு./திருமதி/செல்வி ........................................ என்பவர் தற்போது இத்திணைக்களத்தில்/ மாகாண சபையில்/ தாபனத்தில் .......................................... பதவியை வகித்து வருகின்றார். அவர் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியில்/சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் (எச்சரிக்கை தவிர்ந்த) ஏனைய எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படவில்லை எனவும் உறுதிப்படுத்தி, விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து/செய்யாது முன்வைக்கிறேன்.

---------------------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம்/தாபனம் :-----.
(உத்தியோகபூர்வ முத்திரை)
திகதி :-----.

10-890

---

**கொடபொல பிரதேச சபை**

தென் மாகாண அரச சேவையின் கொடபொல பிரதேச சபையின் தற்போதுள்ள வெற்றிடங்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள கொடபொல பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வதிவாளரிடமிருந்து மாத்திரம் விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிப்பிட்டுள்ள தகைமைகள் உடைய விண்ணப்பதாரர்கள் இதில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து "செயலாளர், கொடபொல பிரதேச சபை, தெனியாய" என்னும் விலாசத்துக்கு 2012.10.31 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**அட்டவணை**

| தொடர் இல. | பதவியின் பெயர் | பதவியின் தொகை | சம்பளம் அளவு மாதாந்தம் | கல்வித் தகைமையும் ஆட்சேர்ப்பு முறையும் |
|---|---|---|---|---|
| 01 | சாரதி | 03 | PL3-2006 A3 ரூ. 12,470-10 x 130-10 x 145-10 x 160-12 x 170-ரூ. 18,860<br><br>01 ஆவது படி ஆரம்பச் சம்பள மட்டமாக கருதப்படும் | கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் ஏற்றுக்கொள்ளப் பட்ட பாடசாலை ஒன்றில் குறைந்தபட்சம் 08 ஆம் வகுப்பு வரை சித்தியடைந்திருத்தல்<br><br>தொழில் தகைமைகள் :<br><br>1. தனியார் வாடகை வாகனமும் குறைந்த ஸ்டேசன் வேன் வண்டி செலுத்துவது பற்றிய மோட்டார் வண்டி போக்குவரத்து ஆணையாளரால் கொடுக்கப்பட்ட திறமை சம்பந்தமான சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>(ஆட்சேர்க்கப்பட்ட திகதிக்கு மூன்று வருடங்களுக்கு முன் இந்த சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.)<br><br>2. வாகன சாரதியாக மூன்று வருட சேவை செய்வதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.<br><br>3. பெருந்தெருக்களின் சட்டதிட்டங்கள் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவியின் பெயர் | பதவியின் தொகை | சம்பளம் அளவு மாதாந்தம் | கல்வித் தகைமையும் ஆட்சேர்ப்பு முறையும் |
|---|---|---|---|---|
| | | | | **வேறு தகைமைகள் :**<br>1. சாதாரணமாக 5 அடிக்கு மேல் உயரமாக இருத்தல் வேண்டும்.<br>2. பகல் நேரங்களிலும் இரவு நேரங்களிலும் தெளிவான கண்பார்வை இருத்தல் வேண்டும். |
| 02 | சுகாதாரத் தொழிலாளர் | 02 | PL1-2006A<br>ரூ. 11,730-10 x 120-10 x 130-10 x 145-12x160-ரூபா 17,600 01 ஆவது படி ஆரம்ப சம்பள மட்டமாக கருதப்படும். | கல்வித் தகைமை சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட மாட்டாது |
| 03 | தெரு தொழிலாளர் | 02 | PL 1-2006 A<br>ரூ. 11,730-10 x 120-10 x 130-10 x 145-12x160-ரூபா 17,600 01 ஆவது படி ஆரம்பச் சம்பள மட்டமாக கருதப்படும் | குறைந்தபட்சம் 5 ஆம் தரம்/6 ஆம் வகுப்புக்கு சித்தியடைந்து இருத்தல் |

**தேவைப்படும் வேறு தகைமைகள் .-** (1) விண்ணப்பதாரர் பரம்பரை மற்றும் பதிவு செய்வதன் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) விண்ணப்பப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் இறுதியான திகதியில் வயது 18க்கு குறையாமலும் 45 க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பதாரர் கொடபொல பிரதேச சபை எல்லைக்குள் 05 வருடங்கள் நிரந்தர வசிப்பாளராக இருத்தல் வேண்டும் ;

(4) சுகதேகியாக இருத்தல் வேண்டும் ;

(5) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்ற குற்றவாளியாக தண்டனை பெற்ற குற்றவாளிகளாக இருத்தல் முடியாது ;

(6) அரச உள்ளூராட்சி அல்லது கூட்டுத்தாபன சேவையில் இருந்து பதவி இறக்கம் செய்யப்பட்டவர் அல்லது அரச நிர்வாக சுற்றறிக்கை 44/90 கீழ் ஓய்வூதியம் பெற்ற உத்தியோகத்தராக இல்லாதிருத்தல் ;

(7) கொடபொல பிரதேச சபையின் தற்போது தற்காலிகமாக சேவை செய்யும் உத்தியோகத்தர்களுக்கு விஷேட சலுகை அளிக்கப்படும்.

(8) விண்ணப்பிக்கும் நபர் பதவியின் முன்காட்டப்பட்டுள்ள கல்வித் தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும் ;

(9) விண்ணப்பம் பெற்றுக்கொண்டதன் பின்னரும் பெற்றுக்கொண்டிருக்கும் இடையிலும் உள்ள காலப்பகுதியில், இந்த ஆட்சேர்ப்பு தாமதப்படுத்துதல், மாற்றம் செய்தல், இந்த அறிவிப்பை இரத்துச் செய்தல் மற்றும் திருத்தி அமைத்தல் போன்றவற்றை கொடபொல பிரதேச சபை செயலாளருக்கு உரியது.

**சேவையில் அமர்த்துவதற்கான சட்டதிட்டங்கள்.-**

(1) இந்தப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உரித்துடையது ;

(2) விதவை, அநாதைகள்/விதவைகள் அநாதைகள் உபகார சம்பளத் திட்டத்துக்கு உதவிப் பணம் செலுத்தல் வேண்டும் ;

(3) தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் 03 ஆண்டுகள் சோதனை காலத்துக்கு உட்படுத்தப்படுவார்கள் அந்த காலத்தில் வேலைகள், வரவு, நன்னடத்தை நன்றாக இருப்பின் சோதனை காலம் முடிவில் பதவியில் நிரந்தரம் செய்யப்படுவார்கள்.

(4) அந்த ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் மேலதிகமாக தாபனக் கோவை கட்டுப்பாடுகளுக்கும் தென் மாகாண சபையின்/தென்மாகாண அரச சேவை கொமிசன் சபையால்/கொடபொல பிரதேச சபையால் அவ்வப்போது வெளியிடப்படும் கட்டுப்பாட்டு நியதிகளின்படி சேவை செய்வதற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பப்பத்திரம் அனுப்பும்போது** : இந்த அறிவிப்பின் மாதிரி விண்ணப்பப்படிவத்தை 12" × 8" அளவு விண்ணப்பப்படிவம் தயார்செய்து விண்ணப்பிக்கும் பதவியை உரையின் வலதுபக்கத்தில் எழுதி 2012.10.31 ஆந் திகதிக்கு முன் "செயலாளர், கொடபொல பிரதேச சபை, தெனியாய" என்னும் விலாசத்துக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பப்பத்திரத்துடன் கீழ் குறிப்பிட்ட காகிதாதிகளின் சான்றிதழ்களின் பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.

* பிறப்புச் சான்றிதழ் ;
* கல்விச் சான்றிதழ் ;
* நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;
* கிட்டத்தில் பெற்றுக்கொண்ட கிராம சேவையாளரின் சான்றிதழ் ;
* கிட்டத்தில் பெற்றுக்கொண்ட குணம் சம்பந்தமான சான்றிதழ் ;
* வேறு திறமைகள் வெளிகாட்டும் சான்றிதழ் ;
* சேவை அனுபவங்கள் சம்பந்தமான சான்றிதழ்.

என். எம் தஹநாயக,
செயலாளர்,
கொடபொல பிரதேச சபை.

கொடபொல பிரதேச சபை அலுவலகம்,
தெனியாய,
2012, செத்தெம்பர் 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கொடபொல பிரதேச சபை**

......................................................................... பதவி

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :----.
2. முதலெழுத்துக்களை குறிக்கும் பெயர் :----.
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
4. நிரந்தர முகவரி :----.
5. தபால் விலாசம் :----.
6. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
7. நிரந்தர வசிக்கும் பிரதேச செயலாளர் தொகுதி :----.
8. நிரந்தர வசிக்குமிடத்தின் உள்ளூராட்சி தாபனத்தின் எல்லை பிரதேசம் :----.
9. பிறந்த திகதி :----.
10. விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதியான திகதியில் வயது :----.
11. ஆண்/பெண் :----.
12. விவாகமானவர்/விவாகமாகாதவர் :-----.
13. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
14. இனம் :----.
15. நீங்கள் இலங்கைப் பிரசையா? இல்லாவிட்டால் பரம்பரையாக உள்ளவரா/பதிவுசெய்ததன் மூலமா? :-----.
16. கல்வித் தகைமை :----.
17. தொழில் தகைமையும்/வேறு தகைமைகளும் :----.
18. நீங்கள் எப்போதாவது நீதிமன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :----.

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், சரியானதும் என்பதை உறுதிமொழிகின்றேன். இதில் அடங்கிய ஏதும் தகவல்கள் உண்மையற்றவை என்றும், பிழையானவை என்றும் கண்டறியப்பட்டால் இந்த பதவிக்கு தெரிவுசெய்யப்படுவதற்கு நான் தகைமையற்றவன் எனக் கருதப்படுவேன் எனவும் நியமனம் பெற்ற பின்னராயின் எந்தவொரு நட்டவீடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

---------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரருக்கு தாபன தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரர் திரு./திருமதி/செல்வி ........................................ என்பவர் தற்போது இந்த திணைக்களத்தில்/ தாபனத்தில் ........................................... சேவை செய்கின்றார். இந்த பதவிக்கு, அவர் தெரிவுசெய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுதலை செய்யப்படுவார்/படமாட்டார் என்றும் அவர் எவ்வகையிலுமான நடத்தை சம்பந்தப்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை செய்தல் தவிர) உட்பட்டவர் அல்ல என்றும் உறுதிப்படுத்துவதுடன், விண்ணப்பப்பத்திரத்தை பரிந்துரைக்கின்றேன்.

---------------------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம்/தாபனம் :-----.
(உத்தியோகபூர்வ முத்திரை)
திகதி :-----.

10-891

---

**கட்டுநாயக்க-சீதுவை நகர சபை**

பதவிகள் வெற்றிடங்கள்

மேல் மாகாண அரசாங்க சேவையின் கட்டுநாயக்க-சீதுவை நகர சபையில் தற்போது வெற்றிடமாகியுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு உரிய தகைமைகளை பூர்த்திசெய்துள்ள மேல் மாகாண மாகாண சபை அதிகார எல்லைகளுக்குள் நிரந்தர வசிப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து 2012.11.26 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ''செயலாளர், கட்டுநாயக்க-சீதுவை நகரசபை, சீதுவை'' எனும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற விண்ணப்பங்கள் போன்றே குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

| 3. பதவி | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| வீதி தொழிலாளி (அ. ஊ. சே. வகுப்பு III) | 01 | ரூபா 11,730-10X120-10X130-10X145-12X160-ரூபா 17,600 | ஆகக்குறைந்தது 8 ஆந் தரம்/9 ஆம் ஆண்டு சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |
| சுகாதார தொழிலாளி (அ. ஊ. சே. வகுப்பு III) | 01 | ரூபா 11,730-10X120-10X130-10X145-12X160-ரூபா 17,600 | ஆகக்குறைந்தது 8 ஆந் தரம்/9 ஆம் ஆண்டு சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |

4. **வயதெல்லை.**- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **பொதுத் தகைமைகள் .-**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நல்லொழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பம் கோரும் திகதியன்று மேல் மாகாணத்தில் தொடர்ந்து 3 வருட நிரந்தர வசிப்பாளராகவிருத்தல் வேண்டும் ;

(iv) தண்டச் சட்டக் கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராகவோ அல்லது அரச/மாகாண அரச சேவையில் வெளியேற்றப்பட்டவராகவோ அல்லது மாகாண அரச நிருவாக சுற்றறிக்கை இல. 44/90 இன்கீழ் ஓய்வுபெற்றவராகவோ இருத்தல் கூடாது ;

(v) இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் ஒரு மாத காலத்திற்குள் அரச வைத்தியர் ஒருவரினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு தோற்றுதல் வேண்டும் என்பதுடன் அப்பரிசோதனையில் உடல் நலம் குன்றியவராக தெரியவரின் நியமனம் இரத்துச்செய்யப்படும்.

6. **ஆட்சேர்த்துக்கொள்ளும் நியதிகள்.-**

தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் பொது நிருவாக சுற்றறிக்கை இல. 24/95 இற்கமைய நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையின்மீது ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

7. **சேவையில் நியமிப்பதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியவுரித்துடையதுமாகும். புதிதாக ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவோர் 3 வருட கால நன்னடத்தை காலப்பகுதிக்கு ஆட்பட்டவர் ஆவர்.

(ii) பொது நிருவாக சுற்றிக்கை இல. 6/2006 இன் பீஎல் 1-2006 இன் பிரகாரம் ரூபா 11,730-10X120-10X130-10X145-12X160. ரூபா 17,600 சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப சம்பள நிலையான ரூபா 11,730 இல் அமர்த்தப்படுவதுடன் 4 ஆம் படிநிலையில் வருவதற்குமுன் வினைத்திறமைகாண் தடை உண்டு.

(iii) விதவைகள்/தபுதாரி, அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

(iv) நியமனஞ் செய்யப்பட்டோர் மூன்று வருட நன்னடத்தை காலத்திற்கு ஆட்பட்டவர் ஆவர். இக்காலப்பகுதியினுள் வேலை, வரவு மற்றும் நடத்தை திருப்திகரமானதாக இருப்பின் நன்னடத்தை கால இறுதியில் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர். ஏற்கனவே அரச/அரச மாகாண சேவையில் நிரந்தர பதவி வகிப்போர் ஒரு வருட காலத்திற்கு பதிற் கடமையாற்றுவதற்கு உட்பட்டு நியமனஞ் செய்யப்படுவர்.

(v) தாபனக் கோவையின் நிபந்தனைகளுக்கும் மேல் மாகாண சபை நிதி ஒழுங்குவிதிகளுக்கும் மாண்புமிகு ஆளுநரின் கட்டளைகளுக்கும் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்குக்காலம் அமுலாக்கப்படும் கட்டளைகளுக்கும் உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத் தலைவரின் கட்டளைகளுக்கும் அமைய கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பதாரிகள் கீழே காட்டப்பட்டுள்ள ஆவணங்களின் பிரதிகளை தங்கள் விண்ணப்பப்படிவங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும்பொருட்டு பிரதேச செயலாளரின் சான்றிதழ்;
(iii) கல்விச் சான்றிதழ்.

எம். டி. எஸ். பிரசாதினி,
செயலாளர்,
கட்டுநாயக்க-சீதுவை நகர சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கட்டுநாயக்க-சீதுவை நகர சபை**

மேல் மாகாண அரசாங்க சேவையின் கட்டுநாயக்க-சீதுவை நகரசபையில் வெற்றிடமாயுள்ள .................................. பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
2. தேசிய அடையாள அட்டை இல. :----.
3. (அ) நிரந்தர விலாசம் :----.
   தொலைபேசி இலக்கம் :----.
   (ஆ) அலுவலக விலாசம் :----.
   தொலைபேசி இலக்கம் :----.
4. (i) பிறந்த திகதி :- ஆண்டு ----, மாதம்----, திகதி ----.
   (ii) 2012.11.26 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
5. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
   பிரதேச செயலாளர் பிரிவு :----.
6. விவாகமானவரா /விவாகமாகாதவரா?:----.
7. பால் (ஆண்/பெண்) :----.
8. கல்வித் தகைமைகள் :----.
9. தொழில் தகைமைகள் மற்றும் அனுபவம் :----.
10. நீர் இதற்கு முன் அரச பதவி வகித்துள்ளீரா? ஆமெனில் விபரம் தருக :----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையும் பிழையற்றவையும் என வெளிப்படுத்துகிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள பொய்யான தகவல்கள் நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்திற்குப் பின்னராயின் பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்கள /நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ------------ தற்போது இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் சேவையாற்றுகிறார். அவரின் சேவையும் நடத்தையும் திருப்திகரமானதெனவும் அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு நியமிக்கப்படுபவராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என இத்தால் சான்றுபடுத்துகிறேன்.

----,
திணைக்கள தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை)

திகதி :----.

10-1101

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை - புத்தூர்**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமம் அளித்தற் கட்டளைச்சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தம்*

இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவர், அவரின் பெயருக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள களரியை குறப்பிடப்பட்டுள்ள இடத்தில் 2013 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்கு மேற்படி உரிமமளித்தல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

அத்தகைய உரிமம் அக்களரிக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும், சொல்லப்பட்ட களரிக்கென உத்தேசிக்கப்பட்டிருக்கும் வளவுக்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் தனது ஆட்சேபனைக்கான ஏதுக்கள் பற்றிய எழுத்து மூலமான கூற்றொன்றினை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்படும் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இரு பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

அ. உதயகுமார்,
தவிசாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வலிகாமம் கிழக்கு,
புத்தூர்,
2012.10.01.

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா, செயலாளரா அல்லது முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தேசித்திருக்கின்ற மனைத்தளம் |
|---|---|---|---|
| சிவப்பிரகாசம் சிவரூபன் புலோலி தெற்கு, புலோலி | செயலாளர் | றோயல் பொழுதுபோக்குக் கழகம் | சுன்னாகம் றோட், புத்தூர் |

10-911

## குருநாகல் பிரதேச சபை

அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக வெளியிடுதல்

*1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆம் சரத்தின் 01 ஆம் உப பிரிவின் மூலம் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கொபேகன பிரதேச சபையினால் 2012, மே மாதம் 25 ஆந் திகதி நடாத்தப்பெற்ற சபைக்கூட்டத்தின் போது நிறைவேற்றப்பட்ட (04) IV ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் மேற்கண்ட பிரேரணை, குறிப்பிட்ட சட்டத்தின் மேற்குறிப்பிட்ட உப சரத்தின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாணம் உள்ளூராட்சி ஆணையாளர் டபிள்யூ. எம். எம். பி. வீரசேகர ஆகிய என்னால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.*

டபிள்யூ. எம். எம். பி. வீரசேகர,
உள்ளூராட்சி ஆணையாளர்,
உள்ளூராட்சி திணைக்களம்,
குருநாகல்.

உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம்,
குருநாகல்,
2012.10.03.

### பிரேரணை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 134 ஆம் சரத்தின் 01 ஆம் உப சரத்தின் மூலம் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கொபேகன பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கீழ்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும்,*

2. குறிப்பிட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை நியமத்துக்கு வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்றும், கொபேகனே பிரதேச சபை பிரேரிக்கின்றது.

### அட்டவணை

கொபேகனே பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள 1921 ஆம் இலக்க பன்னவ கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்டதும்.

வடக்கு : 9118ஆம் இலக்க உறுதியின் பிரகாரம் திரு. எம். எம். எம். சுஹைப் அவரகளினதும் 77773 ஆம் இலக்க உறுதியின் பிரகாரம் திரு. ஏ. எம். எம். காசிம் ஆகியோர்களினதும் ஆதனங்களையும் ;

கிழக்கு : மத்திய கோட்டிலிருந்து 100 மீட்டர் எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனங்களையும் ;

தெற்கு : பன்னவ சிங்களப் பாடசாலையும் மற்றும் 34048 ஆம் உறுதியின் பிரகாரம் திரு. ஏ. டபிள்யு. நஸார் என்பவரது ஆதனங்களையும் ;

மேற்கு : மத்திய கோட்டிலிருந்து 100 மீட்டர் எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து ஆதனங்களையும் எல்லையாக கொண்ட பிரதேசம்.

10-912

---

## பருத்தித்துறை பிரதேச சபை - புலோலி

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமம் அளித்தற் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தம்

இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவர், அவரின் பெயருக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள களரியை குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 2013 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்கு மேற்படி உரிமமளித்தல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

அத்தகைய உரிமம் அக்களரிக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும், சொல்லப்பட்ட களரிக்கென உத்தேசிக்கப்பட்டிருக்கும் வளவுக்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் தனது ஆட்சேபனைக்கான ஏதுக்கள் பற்றிய எழுத்து மூலமான கூற்றொன்றினை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்படும் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இரு பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

பூ. சஞ்சீவன்,
தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை.

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி,
2012.10.05.

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா, செயலாளரா அல்லது முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தே சித்திருக்கின்ற மனைத்தளம் |
|---|---|---|---|
| கிட்டிணன் சிவப்பிரகாசம், கூவில், புலோலி தெற்கு, புலோலி | செயலாளர் | தம்பசிட்டி, றோயல் பொழுதுபோக்குக் கழகம் | மாயக்கை, தம்பசிட்டி, புலோலி கிழக்கு, புலோலி |

10-920

---

## மொறட்டுவை மாநகரசபை

ஆதனவரி - ஆண்டு 2013

மொறட்டுவை மாநகரசபை எல்லைக்குள் தனக்குரியதான அதிகாரத்தின்கீழ் மாநகரசபை சட்டத்தின் (அத்தியாயம் 252ன்) 230 ஆம் பிரிவின்கீழும் சபையினால் ஏகமனதாக 30.08.2012 ஆந் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட 6(6) 17 ஆம் இலக்க தீர்மானத்தின் படியும் மாற்றங்களையும் தவிர்ப்புகளையும் குறிப்பிட்ட விடயங்களில் சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட 2013 ஆம் ஆண்டிற்கு பணம் அறவிடுதல் 2012 ஆண்டிற்குரிய வருடாந்தப் பெறுமதி மாற்றமின்றி 2013 ஆம் ஆண்டிற்கும் அமுல்படுத்தப்பட்டு அந்த வருடாந்தப் பெறுமதியின் கீழ்குறிப்பிட்ட சதவீதங்களின் பிரகாரம் பணம் அறவிடுதல் இத்தால் அறியத்தரப்படுகின்றது :

(அ) வதிவிட ஆதனங்களின் 8% பெறுமதியும் ;

(ஆ) குடியிருப்பு அல்லாத ஏனைய எல்லா தொழில், வர்த்தகம் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் போன்ற சொத்துக்களின் பெறுமதியில் 12% உம் ;

(இ) வெற்றுநிலத்திற்கும், கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் கட்டிடங்களுக்கும் 20 % உம்
நான்கு காலாண்டு சம தவணைகளில் 2013 ஆம் ஆண்டு மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் செலுத்தலாம்.

2. மாநகரசபை சட்டத்திற்கு இணங்க பிரிவு 230(4) இன் பிரகாரம் பின்வரும் கழிவுகள் வழங்கப்படும் :

(அ) 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி பிற்பகல் 3 மணிக்குள் வருடாந்த வரிப் பணம் முழுமையாக செலுத்தப்படின் 10% கழிவு வழங்கப்படும் ;

(ஆ) காலாண்டின் 1 ஆம் மாதத்திற்குள் காலாண்டு வரிப்பணம் செலுத்தப்படின் 5% கழிவும் வழங்கப்படும்.

3. கட்டவேண்டிய காலம் தப்பிய நிலுவைகளுக்கு வதிவிட ஆதனங்களுக்கு 15% மும், ஏனையவற்றிற்கு 20% மும் தண்டமாக செலுத்தவேண்டி ஏற்படும்.

ஏ. எல். எஸ். மல்வென்ன,
மொறட்டுவை மாநகரசபை ஆணையாளர்,
மொறட்டுவை மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
மொறட்டுவை.

10-956

---

## கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத்துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் தவிசாளரால் எடுக்கப்பட்ட தீர்மானம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கண்ணப்பன் கணேசன்,
தவிசாளர்,
கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை.

கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை,
வாகரை,
2012.09.20.

**தீர்மானம்**

உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் அவரகளால் வரையப்பட்டு 1988 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் (பகுதி IV (ஆ) உள்ளூராட்சி) பிரசுரிக்கப்பட்ட நியமத் துணை விதிகளின் I ஆம் பாகத்தையும் பாகம் II இன் 1, 2, 4, 5, 7, 8, 9, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 35, 36, 37, 38, 39, 40, 42 ஆம் இலக்கங்களைக் கொண்ட பிரிவுகளையும், இத்தீர்மானம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரம் செய்யப்படும் திகதியிலிருந்து கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் இடப்பரப்பிற்குள் அமுல்படுத்துவதற்காக 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க (261 ஆம் அத்தியாயம்) நியமத்துணை விதிகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் ஏற்றுக்கொள்வது என்று கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் தவிசாளரால் இத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

10-1084/1

## கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை

பொதுச்சுகாதாரம்

கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் தவிசாளரால் எடுக்கப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 78(1) ஆம் பிரிவின் தாற்பரியப்படி கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை எல்லைக்குள்ளாகப் பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்தல், உறுதிப்படுத்தல் ஆகிய நோக்கத்திற்காக அந்நோக்கத்திற்கென மேலே சொல்லப்பட்ட சட்டத்தினாலும், தொல்லைகள் கட்டளைச் சட்டத்தினாலும், வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டத்தினாலும், அதற்கென அப்போது வலுவிலுள்ள எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினாலும் பிரதேச சபைக்கு குறித்தொதுக்கப்படுகின்றவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிப்பதென்று இத்தால் என்னால் தீர்மானிக்கின்றது.*

கண்ணப்பன் கணேசன்,
தவிசாளர்,
கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை.

கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை,
வாகரை,
*2012.09.20.*

*10-1084/2*

---

## கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை - வாகரை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத்துணை விதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க (261 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் (நியமத்துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச சபையின் தவிசாளரால் எடுக்கப்பட்ட தீர்மானம் இத்தால் அறிவிக்கின்றது.*

*உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மானத்துறை அமைச்சர் அவர்களால் வரையப்பட்டு 1988 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் (பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி) பிரசுரிக்கப்பட்ட நியமத்துணை விதிகளின் I ஆம் பாகத்தையும் சொல்லப்பட்ட நியமத்துணை விதிகள் பாகம் II இன் 21 ஆம் இலக்கம் கொண்ட பிரிவையும் இத்தீர்மானம் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமான பத்திரிகையில் பிரசுரம் செய்யப்படும் திகதியில் இருந்து கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை இடப்பரப்பிற்குள் அமுல்படுத்துவதற்காக 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க 261 ஆம் அத்தியாயம் நியமத்துணை விதிகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் 1ம் உட்பிரிவின் கீழ் ஏற்றுக்கொள்வது என்றும் அத்தோடு இதன் கீழ் குறிததுரைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள தொழில்கள் தீங்கு விளைவிப்பவையும், அபாயகரமானவையும்/தீங்கு விளைவிக்கும் அல்லது அபாயகரமான தொழில்கள் என்று தீர்மானிப்பது என்றும் கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் தவிசாளரால் இத்தால் தீர்மானிக்கின்றது.*

### அட்டவணை

1. தேநீர்/காப்பிக்கடை வைத்திருத்தல்.
2. பாண் போறணை வைத்திருத்தல்.
3. உணவுச் சாலை வைத்திருத்தல்.
4. மரக்காலை வைத்திருத்தல்.
5. விறகுச் சாலை வைத்திருத்தல்.
6. காய்ச்சியிணைக்கும் வேலைத்தளம் வைத்திருத்தல்.
7. மிளகாய்த் தானியங்கள் அரைக்கும் ஆலை வைத்திருத்தல்.
8. நெல் குத்தும் ஆலை வைத்திருத்தல்.
9. முடியலங்கரிக்கும் கடை அல்லது நிலையத்தை வைத்திருத்தல்.
10. மரவேலைத்தளம் வைத்திருத்தல்.
11. கடைச்சல் இயந்திர வேலைத்தளம் வைத்திருத்தல்.
12. மோட்டார் வண்டி பழுதுபார்க்கும் நிலையம் வைத்திருத்தல்.
13. பீடி அல்லது சுருட்டு உற்பத்தி நிலையம் வைத்திருத்தல்.
14. பெற்றோலிய பொருட்களை நிரப்பும் நிலையம் ஒன்றை வைத்திருத்தல்.
15. பெற்றோலிய பொருட்களை விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை வைத்திருத்தல்.
16. மின் வேலைத்தளம் ஒன்றை வைத்திருத்தல்.
17. அரிவுக் கிடங்கொன்றை வைத்திருத்தல்.
18. கொல்லுலை ஒன்றை வைத்திருத்தல்.
19. வானொலி திருத்தும் கடை ஒன்றை வைத்திருத்தல்.
20. ரயர்கள், குழாய்கள் வல்கனைற்றால் ஒட்டு வேலைத்தளம் ஒன்றை வைத்திருத்தல்.
21. சுண்ணாம்பு சேமித்து வைத்திருத்தல்.
22. உரத்தை சேமித்து வைத்திருத்தல்.

23. பனிக்கட்டி தொழிற்சாலை ஒன்றை வைத்திருத்தல்.
24. பயிர் இரசாயனப் பொருட்களைச் சேமித்து வைத்திருத்தல்.
25. புகையிலை சேமித்து வைத்திருத்தல்.
26. விடுதி உணவகம் அல்லது விடுதியகம் ஒன்றை வைத்திருத்தல்.
27. சவர்க்கார தொழிற்சாலை ஒன்றை வைத்திருத்தல்.
28. ஒரு பால் பண்ணையை வைத்திருத்தல்.
29. வைக்கோல் சேமித்து வைத்திருத்தல்.
30. சீமெந்து சேமித்து வைத்திருத்தல்.
31. மீன்/இறால் வகைகளை பனிக்கட்டியில் பொதியாக்க ஓர் இடத்தை வைத்திருத்தல்.
32. ஐஸ்கிரிம் உற்பத்தியும் விற்பனையும்.
33. சாக்குகளைச் சேமித்து வைத்திருத்தல்.
34. வெற்றுப்போத்தல்களைச் சேமித்தல்.
35. ஓடுகளை உற்பத்தி செய்தல் அல்லது சேமித்தல்.
36. மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர்களைத் திருத்தும் நிலையமொன்றை வைத்திருத்தல்.
37. நூறு கிலோ கிராமிற்கு மேலாக கருவாட்டை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்.
38. தொலைக்காட்சிப்பெட்டிகள், வீடியோ மற்றும் ஒலி, ஒளி உபகரணங்கள் என்பனவற்றை பழுதுபார்த்தல்.
39. மீன் மற்றும் இறால் பதனிடுதல்.
40. பழங்கள் விற்பனை செய்தல்.
41. மரக்கறி விற்பனை செய்தல்.
42. கள்ளுத்தவறணை ஒன்றை வைத்திருத்தல்.
43. சாராயத் தவறணை ஒன்றை வைத்திருத்தல்.
44. குளிர்பானக் கடையொன்றை வைத்திருத்தல்.
45. சர்பத் பானம் மட்டும் விற்பனை செய்யும் கடையொன்றை வைத்திருத்தல்.
46. செங்கல் உற்பத்தி செய்யும் சூளையொன்றை வைத்திருத்தல்.
47. புகையிலை உற்பத்தி செய்தல் அல்லது பதனிடுதல்.
48. கருங்கல் உடைத்தலும் சேகரித்தலும்.
49. 50க்கு மேற்பட்ட மாடுகள்/ஆடுகள் வளர்க்கும் பட்டியொன்றை வைத்திருத்தல்.
50. சலவைக் கடை (லொன்றி) ஒன்று வைத்திருத்தல்.

கண்ணப்பன் கணேசன்,
தவிசாளர்,
கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை.

கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை,
வாகரை.
2012.09.20.

10-1084/3

---

**கோறளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச சபை**

குறித்த சில தொழில்கள் மீதான வரி விதித்தல் பற்றிய அறிவித்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை எல்லைகளுக்குள் கீழ்காணும் அட்டவணையில் பந்தி 1 இல் தரப்பட்டள்ள தொழில் எதனையும் கொண்டு நடாத்துகின்ற ஒவ்வோர் ஆள்மீதும் எந்த ஆண்டின் அத்தகைய வரியானது செலுத்தப்படற்பாலதோ அந்த ஆண்டின் முற்போந்த ஆண்டுக்கான தொழில் எடுப்பனவுகளுக்கிணங்க பந்தி 2 இன் நிரை ஒன்றிலும் நிரை இரண்டிலும் தரப்பட்டுள்ள விபரப்படி வரி ஒன்றை விதித்து 2013 ஆம் ஆண்டு தொடக்கம் ஆண்டுதோறும் அறவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். 2013 ஆம் ஆண்டிற்குரிய வரியை 2013.03.31 ஆந் திகதிக்கு முன்னரும் தொடர்ந்து வரும் ஆண்டிற்குரிய வரியை ஆண்டுதோறும் மாச்சு 31 ஆந் திகதிக்கு முன்னரும் கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை*

தலைமை அலுவலகத்தில் செலுத்த வேண்டும் 'தொழில் எடுப்பனவுகள் என்பதற்கான பொருள் கோடல்' இதன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின் 152 (4) ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளது.

கண்ணப்பன் கணேசன்,
தவிசாளர்,
கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை.

கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை,
வாகரை.
2012.09.20.

**அட்டவணை**

**பந்தி 1**

1. தரகு முகவர்கள்
2. நிதியுதவியளிப்பவர்கள்
3. பணக்கடன் கொடுப்போர்
4. அடகுபிடிப்பவர்கள்
5. ஏலவிற்பனையாளர்கள்
6. தரகர்கள்
7. வேலை ஒப்பந்தக்காரர்கள்
8. கலியாணத்தரகர்கள்
9. கட்டட வரைபடம் வரைவோர்கள்
10. மோட்டார் வாகன ஓட்டப் பயிற்றுவிக்கும் நிறுவனம் வைத்திருப்பவர்கள்
11. கணக்குப் பரிசோதனை ஸ்தாபனத்தை வைத்திருப்பவர்கள்
12. பண முதலீடு செய்பவர்கள்
13. பிரத்தியேக கல்வி நிலையங்கள் நடாத்துதல்
14. காப்புறுதி முகவர்கள்
15. சுற்றுலா பஸ் சேவை நடாத்துதல்
16. பொதிகளை ஏற்றி இறக்கும் சேவைகளைச் செய்வோர்
17. உள்ளூர் வர்த்தக வங்கி நிறுவனங்கள்
18. உள்ளூர் வங்கி நிறுவனங்கள்
19. கூட்டுறவு வங்கி நிறுவனங்கள்
20. வெளிநாட்டு வங்கி நிறுவனங்கள்
21. காப்புறுதி நிலையங்கள்
22. சட்டத்தரணியும், நொத்தாரிசும்
23. சட்டத்தரணி
24. நொத்தாரிசுகள்
25. தனியார் மருந்தகம்
26. தனியார் மருத்துவமனைகள்
27. வைத்திய சேவையாளர்கள்
28. தொழில் முகவர்கள்
29. பிரயாண முகவர்கள்
30. அந்திம கால சேவைகள் பொறுப்பேற்பவர்கள்
31. தனியார் வைத்தியசாலைகள்
32. உடை தயாரித்தல்
33. ஹியும் பைப் தயாரிப்பவர்கள்

**பந்தி 2**

| நிரை I<br>தொழில் எடுப்பனவுகள் | நிரை II<br>வரிகள்<br>ரூபா |
|---|---|
| 01. ரூபா 6,000 இனை விஞ்சாதவிடத்து | இல்லை |
| 02. ரூபா 6,000 இனை விஞ்சி ஆனால் ரூபா 12,000 இனை விஞ்சாதவிடத்து | 90 |
| 03. ரூபா 12,000 இனை விஞ்சி ஆனால் ரூபா 18,750 இனை விஞ்சாதவிடத்து | 180 |
| 04. ரூபா 18,750 இனை விஞ்சி ஆனால் ரூபா 75,000 இனை விஞ்சாதவிடத்து | 360 |
| 05. ரூபா 75,000 இனை விஞ்சி ஆனால் ரூபா 1,50,000 இனை விஞ்சாதவிடத்து | 1,200 |
| 06. ரூபா 1,50,000 இனை விஞ்சாதவிடத்து | 3,000 |

10-1084/4

### கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை

*வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 268) ஏற்பாடுகளையும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 47 தொடக்கம் 58 வரையிலான ஏற்பாடுகளையும் அமுல்படுத்துதல்*

கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குட்பட்ட சகல இடங்களிலும் வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 268) ஏற்பாடுகளையும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 47 தொடக்கம் 58 வரையிலான ஏற்பாடுகளையும், எதிர்வரும் 01.11.2012 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இதன் பிரகாரம் எவராவது கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை நிருவாக எல்லைக்குட்பட்ட ஏதேனும் பொது வழியினூடாக அல்லது காணிக்குள் ஏதேனும் கட்டிடத்தை, எல்லைச்சுவரை, வாசலை அல்லது வேலியை 01.11.2012 ஆந் திகதிக்குப் பின்னர் கட்டுவது தொடர்பில் கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் உரிமத்தை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

கண்ணப்பன் கணேசன்,
தவிசாளர்,
கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை.

கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை,
வாகரை,
2012.09.20.

10-1084/5

### ஜா-எல பிரதேச சபை

*ஜா-எல பிரதேச சபையினால் 18.02.2005 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (அ) இல் பிரசுரிக்கப்பட்ட நூல் நிலைய துணைவிதிகளை அமுலாக்கலும் வர்த்தமானியில் பிரசுரித்தலும்*

2005 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (குறைநிரப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் உள்ளூராட்சி அமைச்சரினால் தாபிக்கப்பட்ட 18.02.2005 ஆந் திகதிய 1713/11 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பெற்ற திண்ம குப்பை முகாமைத்துவத் துணை விதிகளின் 3 ஆம் பிரிவின்கீழ் ஜா-எல பிரதேச சபை அதிகார பிரசேத்திற்குள் பலவந்தமாக அமுல்படுத்துவதற்கு பொருத்தமானது எனும் பிரேரணை 20.04.2012 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தவிசாளர் மாண்புமிகு லலித் நிஷாந்த அபேவிக்ரம அவர்களால் பிரேரிக்கப்பட்டு மாண்புமிகு பிரதேச சபை உறுப்பினர் நந்தசிறி சில்வா அவர்களால் ஆமோதிக்கப்பட்டு சபையில் நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேலும், இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து இத்துணைவிதி ஜா-எல பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திற்குள் பலவந்தமாக அமுல்படுத்தப்படுமென பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

எல். ஏ. மஞ்சுளா சமன்தி,
செயலாளர்,
ஜா-எல பிரதேச சபை.

ஜா-எல பிரதேச சபை,
கந்தானை.

10-1191

## நானாவித அறிவித்தல்கள்

### கடுவளை மாநகர சபை

*மதிப்பீட்டு வரி அமுலாக்கம் - 2013*

கடுவளை மாநகர சபையினால் 2012, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி நடத்தப்பட்ட வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5 (1) (i) (அ) 01/இ/0278 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படு கின்றது.

2013 ஆம் ஆண்டுக்காக அமுலாக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய தினங்களில் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டுக்குமென சமமான நான்கு தவணைகளில் கடுவளை மாநகர சபை அலுவலகத்திற்குச் செலுத்தப்பட வேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகின்றது.

2013 ஆம் ஆண்டுக்கான மொத்தம் மதிப்பீட்டு வரி 2013 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 31 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் கடுவெல மாநகர சபைக்கு செலுத்தப்பட்டால் அத்தகைய மொத்த மதிப்பீட்டுவரி அளவில் நூற்றுக்கு பத்து (10%) சதவீத கழிவும், ஒவ்வொரு காலாண்டுக்கும் ஏற்புடைய மதிப்பீட்டுவரி அத்தகைய ஒவ்வொரு காலாண்டுக்கும் முந்திய மாதத்தின் இறுதித் தினம் அல்லது அத்தினத்திற்கு முன்னர் கடுவெல மாநகர சபைக்கு செலுத்தப்படு மாயின் அத்தகைய ஒவ்வொரு காலாண்டின் மதிப்பீட்டுவரி அளவில் நூற்றுக்கு ஐந்து (5%) சதவீத கழிவு வழங்கப்படும்.

மதிப்பீட்டு வரியைச் செலுத்துவதை இலகுவாக்குவதன் பொருட்டு, 2013 ஆண்டு சனவரி 01 ஆந் திகதியிலிருந்து சனவரி 31 ஆந் திகதி வரை வாரத்தின் வேலைநாட்கள், அரச விடுமுறை நாட்கள், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தினங்களிலும் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை பத்தரமுல்லை, கடுவெல மற்றும் அத்துருகிரிய ஆகிய மாவட்ட அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்பதை மேலும் அறிவிக்கப்படுகின்றது.

ஜீ. எச். புத்ததாச,
முதல்வர்,
கடுவளை மாநகர சபை.

கடுவளை மாநகர சபை அலுவலகம்,
கடுவளை,
2012, செத்தெம்பர் 28.

### பிரேரணை

“252 ஆவது அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 238 பிரிவின் மூலம் மாநகர சபைக்கு அளிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம், கடுவெல மாநகர சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து வீடுகளில், கட்டடங்களில், காணிகளில் மற்றும் ஏதேனும் இணைபாகம் வருடாந்த மதிப்பீட்டுப் பெறுமதியாகக் கடுவளை மாநகர சபையினால் 2012 ஆம் ஆண்டுக்கென ஏற்றுக்கொள்ளப்பட்ட வருடாந்த மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் சில ஆதனங்கள் சம்பந்தமாக மதிப்பீட்டுத் திணைக்களத்தால் திருத்தஞ் செய்யப்பட்டு கடுவெல மாநகர சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய திருத்தங்களுக்கு அமைவான வருடாந்தப் பெறுமதியும், 2013 ஆம் ஆண்டுக்காக கடுவெல மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியொன்றாக ஏற்றுக்கொள்வதற்கும், அத்தகைய மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 230 ஆவது பிரிவில் (1) ஆவது உப பிரிவு மூலம் கடுவெல மாநகர சபைக்கு கிடைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் அத்தகைய ஆதனம் மீது மேலே சொல்லப்பட்ட வருடாந்தப் பெறுமதியின்

(அ) வெற்றுக் காணி மற்றும் குடியிருப்பு இடம் மீது நூற்றுக்கு ஒன்பது (9%) சதவீத மதிப்பீட்டு வரியும் ; அத்துடன்

(ஆ) வியாபார அல்லது வர்த்தக கருமங்களுக்காக பாவிக்கப்படும் இடங்கள் மீது நூற்றுக்கு ஒன்பது (9%) சதவீத மதிப்பீட்டு வரியும்.

2013 ஆம் ஆண்டுக்காக அமுலாகி அறவிடுவதற்கும், அத்துடன்

அந்த மதிப்பீட்டு வரி, அத்தகைய மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 230 ஆவது பிரிவின் (2) ஆவது உபபிரிவின் (இ) பந்தியின் ஒழுங்குவிதிகளின் கீழ் அத்தகைய ஆண்டின் மாச்சு மாதம் 31, யூன் மாதம் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் மாதம் 31 ஆகிய தினங்களில் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைவதற்கு முன்னர் சமமான நான்கு தவணைகளில் கடுவெல மாநகர சபைக்கு செலுத்துவதற்காக கட்டளை இடுவதற்கும் கடுவெல மாநகர சபை பிரேரிக்கின்றது.”

10-888/1

---

### கடுவளை மாநகர சபை

உரிமங்கள் கட்டணங்களின் அமுலாக்கம் - 2013

கடுவளை மாநகர சபையினால் 2012, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி நடத்தப்பட்ட வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5 (1) (i) (ஓ) 01/ ஜ/0278 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கடுவளை மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் ஏதேனும் கைத்தொழிலொன்றை கொண்டுநடாத்திவரும் இடத்திற்காக, கடுவெல மாநகர சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுல்படுத்துவதற்கு தீர்மானித்த மாநகர சபை இணங்கிக்கொண்ட துணைவிதிகளில் ஏதேனும் துணைவிதியொன்றின் கீழ் உரிமமொன்றைப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியவிடத்து, அத்தகைய இடத்திற்கு 2013 ஆம் ஆண்டுக்காக கடுவளை மாநகர சபை ஆணையாளரிடமிருந்து செல்லுபடியாகும் உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும், அத்தகைய செல்லுபடியாகும் உரிமமொன்றின்றி அவ்வாறான ஏதேனும் கைத்தொழிலொன்றைக் கொண்டு நடாத்துதல் குற்றமொன்றெனவும் மேலும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அவ்வாறான ஏதேனும் கைத்தொழிலொன்றைக் கொண்டு நடாத்தப்படும் ஒவ்வொரு இடத்திற்கும் 2013 ஆம் ஆண்டுக்கு கடுவெல மாநகர சபை ஆணையாளரால் விநியோகிக்கப்படும் அனைத்து உரிமங்களின் மீதும் மேற்காண் பிரேரணையில் குறிப்பிட்டவாறு கட்டணமொன்றைக் கடுவெல மாநகர சபைக்கு செலுத்த வேண்டுமெனவும் மேலும் அறிவிக்கப்படுகின்றது.

ஜீ. எச். புத்ததாச,
முதல்வர்,
கடுவளை மாநகர சபை.

கடுவளை மாநகர சபை அலுவலகம்,
கடுவளை,
2012, செத்தெம்பர் 28.

### பிரேரணை

“1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் மூலம் கிடைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அலுவல்கள் பற்றிய கௌரவ அமைச்சரால் வரைவு செய்யப்பட்ட 541/17 ஆம் இலக்கமும் 1989.01.20 ஆந் திகதியையும் கொண்ட விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள மற்றும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், மேலே சொல்லப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மூலம் கிடைத்துள்ள அதிகாரத்தின் கீழ் மேல் மாகாண மாகாண சபையால் ஆமோதிக்கப்பட்டமைக்கு 1991, மே மாதம் 21 ஆந் திகதிய 663/5 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மற்றும் 2011, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1732 ஆம் இலக்க வர்த்தமான பத்திரிகையின் மூலம் அறிவிக்கப்பட்டவாறு மாநகர சபையால் ஏற்றுக்கொண்டு அமுல்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட சபையின் இணக்கத்தின் பிரகாரம், மாநகர சபை இணங்கிக்கொண்ட துணைவிதிகளின் ஒழுங்குவிதிகளுக்கமைய இங்கு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின் I ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் கைத்தொழிலொன்றை 2013 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் போது, அத்தகைய கைத்தொழிலைக் கொண்டுநடாத்தும் இடத்திற்காக கடுவெல மாநகர சபை ஆணையாளரிடமிருந்து உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அவ்வாறு விநியோகிக்கப்படும் அனைத்து உரிமங்களுக்கும், அத்தகைய கைத்தொழிலைக் கொண்டுநடாத்தும் இடத்தின் வருடாந்த பெறுமதி அந்த அட்டவணையின் 2 ஆம் பாகத்தில் I ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள அளவுகளில் நிலவும் போது, அதன் II ஆம் நிரையில் நேரொத்ததாகக் காட்டப்பட்டுள்ள பணத்தொகைக்கு அமைய உரிமக் கட்டணமொன்றை 252 ஆம் அத்தியாயமான மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 247அ பிரிவு மூலம் மாநகர சபைக்குக் கிடைத்துள்ள அதிகாரங்களின்

பிரகாரம், 2013 ஆம் ஆண்டுக்காக அமுலாக்கி அறவிடுவதற்கும் கடுவெல மாநகர சபை பிரேரிக்கின்றது."

**அட்டவணை**

**1 ஆம் பாகம்**

1. பன்றிகள் போன்ற மிருகங்களை வளர்த்தல்.
2. மீன் விற்பனை.
3. இறைச்சி விற்பனை.
4. ஊணறுக்கும் இடம்.
5. சிகை அலங்காரம் மற்றும் நாவிதர் சலூன்கள்.
6. தோல், எச்சங்கள், எலும்புகள், தூள் அல்லது பசளை அல்லது விசம் கலந்த அல்லது வதைதரும் துர்நாற்றம் வெளியேறும் பொருட்களின் விற்பனை அல்லது களஞ்சியப்படுத்தல்.
7. சலவைத் தொழிற்சாலை.
8. தங்குமனை.
9. ஹோட்டல்.
10. சாப்பாட்டுக் கடை, சிற்றுண்டிச்சாலை மற்றும் தேநீர் அல்லது கோப்பிக்கடை.
11. பாற் பண்ணை மற்றும் பால் விற்பனை.
12. வெதுப்பகம்.
13. மரணச்சடங்கு நிலையங்கள் மற்றும் மரணச்சடங்கு நடவடிக்கைகளை மேற்கொள்வோர்.
14. குளிர்பானங்கள் உற்பத்தி.
15. பனிக்கட்டித் தொழிற்சாலை.
16. காரீயம் வகைப்படுத்தல் மற்றும் தயாரித்தல்.
17. காரீயத்தைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
18. பசளை உற்பத்தி.
19. பசளைகளை களஞ்சியப்படுத்தி வைத்தல்.
20. தோற் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்தல்.
21. மாசிக் கருவாடு ஐந்து அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
22. கோழி விற்பனை நிலையமொன்றைக் கொண்டுநடாத்துதல்.
23. கருங்கல் உடைத்தல் மற்றும் கபொக் மண் வெட்டுதல்.
24. சரளைக் கல் அகழ்வு.
25. குதிரைகள் அல்லது மாடுகளுக்கு லாயம், விற்பனை நிலையம், தொழுவம் அல்லது லயம் வைத்திருத்தல்.
26. கால்நடை நோய் நிலையமொன்றைக் கொண்டுநடாத்துதல்.
27. இறப்பர் தயாரித்தல்.
28. பசளை, சுண்ணாம்பு அல்லது காரீயம் சாக்குகளில் இட்டு களஞ்சியப்படுத்தல், சுத்தப்படுத்தல், புதுப்பித்தல் அல்லது தூசி அகற்றுதல்.
29. பாக்கு தயாரித்தல்.
30. மைக்கா தயாரித்தல்.
31. செம்மறி ஆடுகள் அல்லது ஆடுகள் அல்லது அந்த இரண்டு வகையும் அல்லது 10க்கு மேல் அவற்றை அடைத்து வைப்பதற்கான தொழுவம் அல்லது கொட்டில்.
32. ஓடுகள், கொங்கிறீட் குழாய்கள் அல்லது பிற கொங்கிறீட் பொருட்களை உற்பத்தி செய்தல்.
33. சுண்ணாம்பைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
34. பெரிய வெங்காயம் 5 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
35. உருளைக்கிழங்கு 5 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
36. சிரட்டைக்கரி ஒரு அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
37. கறுவா, கராம்பு அல்லது நார், கந்தகப் புகை அடித்து தயாரித்தல்.
38. பழைய லோகங்களை களஞ்சியப்படுத்தி வைத்தல்.
39. சீமெந்து 25 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
40. கருவாடு 10 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
41. உப்பிட்ட மீன் 10 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
42. இறப்பர் ஒட்டுப்பால் துணிக்கைகளை அரைத்தல் அல்லது காயவைத்தல்.
43. ரிறங்குப்பெட்டிகள் உற்பத்தி.
44. அறுத்து தயாரிக்கப்பட்ட கோழி முதலிய இறைச்சிக் கடையொன்றைக் கொண்டு நடாத்துதல்.
45. தோற்பொருட்கள் தயாரிப்பு.
46. கிருமி நாசினிகளை உற்பத்தி செய்தல்.
47. பற்றறி நிரப்பும் அல்லது பற்றறி களஞ்சியப்படுத்தி வைக்கும் நிறுவனமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
48. ரயர் மீளமைப்பு அல்லது புதுமெருகூட்டல் நிறுவன மொன்றைக் கொண்டு நடாத்துதல்.
49. ரயர் அல்லது ரியூப் வல்கனைஸ் செய்யும் நிறுவனமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
50. வெற்றுப்போத்தல்கள் 100க்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
51. கறுவாப்பட்டை ஒரு அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
52. கொக்கோவா 10 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
53. பிரேதப் பெட்டிகள் தயாரித்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல் அல்லது பிரேதப்பெட்டிகள் தயாரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
54. வீட்டுத் தளபாடங்களைத் தயாரித்தல் அல்லது களஞ்சியப் படுத்தி வைத்தல் அல்லது வீட்டுத்தளபாடங்களைத் தயாரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
55. மாணிக்கக் கல் வியாபாரிகளால் மாணிக்கக் கல் வெட்டுதல் மற்றும் மெருகூட்டுதல்.
56. உரிமம் பெற்ற வியாபாரிகளால் இறப்பர் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
57. பிரம்புப் பொருட்களைத் தயாரித்தல் அல்லது களஞ்சியப் படுத்தி வைத்தல் அல்லது பிரம்புப் பொருட்களைத் தயாரித் தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
58. கொங்கிறீட் அல்லது களிமண்ணால் செய்யப்பட்ட குழாய் களைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
59. இயந்திர சக்தியை உபயோகித்து புடவை நெய்யும் தொழிற் சாலையொன்றைக் கொண்டு நடாத்துதல்.
60. மா அல்லது பலசரக்கு அரைத்தல்.
61. புண்ணாக்கு தவிர்ந்த, விலங்கு உணவுகள் 20 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
62. விலங்கு உணவுகள் தவிர்ந்த, வேறு கருமங்களுக்காக தானிய வகை ஒரு தொன்னுக்கு களஞ்சியப்படுத்தி வைத்தல். (ஆயினும் கூட்டுறவுச் சங்கமொன்றினால் களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் அத்தகைய தானியங்கள் இதில் அடங்காது.)
63. இறப்பர் பொருட்கள் தயாரிப்பு.
64. சுறாச்சிறகுகளைப் பதப்படுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
65. இயந்திரங்கள் மூலம் எலும்புகளை அரைத்தல்.
66. புண்ணாக்கு ஒரு தொன்னுக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
67. பொலித்தீன், செலியுலொயிட் அல்லது பர்ஸ்பெக்ஸ் உற்பத்தி மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
68. அமிலங்கள் 5 கலன்களுக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.

69. கற்பூர உற்பத்தி.
70. பூட் சப்பாத்து மற்றும்/அல்லது பாதணிகள் தயாரிப்பு.
71. மெழுகுதிரி உற்பத்தி.
72. நீராவி, நீர் அல்லது பிற இயந்திர சக்தியை உபயோகித்து மரம் அல்லது வெட்டுமரம் அல்லது பலகை அரிதல்.
73. கொப்பறாக் களஞ்சியமொன்றைக் கொண்டுநடாத்துதல்.
74. இயந்திர மூலம் தேங்காயெண்ணெய் உற்பத்தி.
75. இயந்திர மூலம் நல்லெண்ணெய் உற்பத்தி.
76. எண்ணெய் எடுப்பதற்காக செக்கொன்றை அல்லது கையியக்க இயந்திரத்தை வைத்திருத்தல்.
77. நார் தயாரிப்பு அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல் அல்லது நார் தயாரிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
78. தீப்பெட்டி உற்பத்தி.
79. பஞ்சைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
80. தேங்காயெண்ணெய் 50 கலன்களுக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
81. மெதிலேற்றட் ஸ்பிறித்து களஞ்சியப்படுத்தி வைத்தல்.
82. எசிற்றிலின் தயாரிப்பு.
83. 500 ஓடுகளுக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு பிரிவொன்று அல்லது களஞ்சியமொன்றை கொண்டு நடாத்துதல்.
84. 250 செங்கற்களுக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு பிரிவொன்று அல்லது களஞ்சியமொன்றை கொண்டு நடாத்துதல்.
85. 250 கபொக் கற்களுக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு பிரிவொன்று அல்லது களஞ்சியமொன்றை கொண்டு நடாத்துதல்.
86. சிகரட் தயாரிப்பு.
87. பீடி தயாரிப்பு.
88. பூச்சுகள் அல்லது வார்னிஷ் 5 அந்தருக்கு மேல் களஞ்சியப் படுத்தி வைத்தல்.
89. மரப்பெட்டிகள் 5 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
90. தும்பு தயாரிப்பு.
91. பசளை, சுண்ணாம்பு அல்லது நிலக்கரி இடப்பட்ட சாக்குகள் தவிர்ந்த பிற 100 சாக்குகளுக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
92. பாவிக்கப்பட்ட இறப்பர் ரயர் அல்லது ரியூப் 150 க்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
93. இனிப்புப் பண்டங்கள் தயாரிப்பு.
94. சிரட்டைக்கரி தவிர்ந்த பிற கரிகள் ஒரு அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
95. படகுகள் அல்லது விசைப்படகுகள் தயாரிப்பு.
96. மரப்பெட்டிகள் தயாரிப்பு.
97. ஒக்சிஜன் மற்றும் வால்டிங் வேலை செய்யப்படுகின்றமை, மோட்டார் வாகனங்களின் திருத்த வேலைகள் செய்யப்படு கின்றமை, கராஜ் ஒன்றல்லாத, வேறு நிறுவனமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
98. மோட்டார் வாகனங்களின் திருத்த வேலைகள் செய்யப் படுகின்றமை, இரும்பு மற்றும் உலோக வேலைகள் செய்யப் படுகின்றமை, கராஜ் ஒன்றல்லாத, வேறு நிறுவன மொன்றைக்கொண்டு நடாத்துதல்.
99. மோட்டார் வாகனங்களின் திருத்த வேலைகளை மேற் கொள்ளும் நிறுவனமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
100. மோட்டார் வாகனங்களைச் சர்விஸ் செய்யும் நிறுவன மொன்றைக் கொண்டு நடாத்துதல்.
101. இயந்திர சக்தியை உபயோகித்து அச்சுக்கூடமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
102. கையால் அல்லது காலால் இயக்கும் இயந்திரத்தை உபயோகித்து அச்சுக்கூடமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
103. பாவித்த உடைகளை களஞ்சியப்படுத்தி வைத்தல்.
104. தேங்காயெண்ணெய் தவிர்ந்த வேறு எந்தவொரு வகை எண்ணெய் 54.5 லீற்றருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு பிரிவொன்றை அல்லது களஞ்சியமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
105. கந்தகம் மற்றும்/அல்லது கந்தகத் தூள் 50 கிலோ கிராமுக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
106. பூச்சுகள் அல்லது வார்னிஷ் தயாரிப்பு.
107. 100 க்கு மேற்பட்ட தோட்டாக்களைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
108. தும்பு அல்லது பஞ்ச மெத்தை அல்லது தலையணை அல்லது குஷன் தயாரிப்பு மற்றும்/ அல்லது களஞ்சியப்படுத்தி வைத்தல்.
109. புதிய ரயர்கள் அல்லது ரியூப்புகள் 150 க்கு மேல் களஞ்சியப் படுத்தி வைத்தல்.
110. பாவிக்கப்பட்ட கடதாசி 250 கிலோகிராமுக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
111. ஸ்பிறே பெயின்ரிங் செய்யும் நிலையமொன்றை கொண்டு நடாத்துதல்.
112. பொறிமுறை குளிரூட்டி நிலையமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
113. இயந்திர சக்தியை உபயோகித்து, உடுப்புகளைத் தைக்கும் நிறுவனமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
114. சேர்ட் கொலர்கள் மற்றும் சேர்ட் கைகளுக்கு சுருக்கம் வைக்கும் நிறுவனமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
115. ட்றைகிளீனிங் செய்யும் நிறுவனமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
116. இயந்திர சக்தியை உபயோகிக்காது, எலெக்றோபிளேற்றிங் வேலை, குறோமியம் பூசுதல், பொன்முலாம் பூசுதல், வெள்ளிப் பூச்சிடல் அல்லது வெண்கலப் பூச்சிடல் நிலையமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
117. இயந்திர சக்தியை உபயோகித்து, எலெக்றோபிளேற்றிங் வேலை செய்தலும், கராஜ் அல்லாததுமான நிறுவன மொன்றைக் கொண்டு நடாத்துதல்.
118. நிலக்கரி வாயு உற்பத்தி.
119. காபன்டயொக்சைட் உற்பத்தி.
120. தூய்மையற்ற உலோகங்களைச் சூடாக்குதல்.
121. வாணவேடிக்கைப் பொருட்களை களஞ்சியப்படுத்தல்.
122. இரண்டு கிலோகிராமுக்கு மேல் வெடிமருந்துகள் மற்றும் வெடி பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்தல்.
123. பசை, மெழுகு அல்லது சாம்பிராணி என்பவற்றைக் களஞ்சியப்படுத்தல்.
124. நிலத்திற்குப் பூசும் பொலிஷ் வகைகள் உற்பத்தி.
125. தார் காய்ச்சுதல் நிறுவனமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
126. குளிரூட்டிகளின் திருத்த வேலைகள், றிகொண்டிஷன் செய்தல் அல்லது பரிசீலித்தல் செய்யும் நிறுவனமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
127. மோட்டார் கார் பாகங்களைப் பொருத்தி உருவாக்கும் நிறுவனமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
128. ஸ்கூட்டர் அல்லது மோட்டார் சைக்கிள் பாகங்களை பொருத்தி உருவாக்கும் நிறுவனமொன்றைக் கொண்டு நடாத்துதல்.
129. வெடி பொருட்கள், இரசாயன பொருட்கள் மற்றும் பசளை விற்பனைக்காக நிறுவனமொன்றைக் கொண்டு நடாத்துதல்.

**II ஆம் பாகம்**

| நிரை I வருடாந்த பெறுமதி | நிரை II உரிமக் கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 1. ரூ. 1,500 ஐ விஞ்சாதவிடத்து | 2,000 0 |
| 2. ரூ. 1,500 ஐ விஞ்சிய ஆனால் ரூ. 2,500 ஐ விஞ்சாதவிடத்து | 3,000 0 |
| 3. ரூ. 2,500 ஐ விஞ்சுமிடத்து | 5,000 0 |

மேற்காண் I ஆம் பாகத்தில் குறிப்பிட்ட கைத்தொழில்களிடையே 8 ஆம் இலக்கத்தில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் தங்குமனையொன்று அல்லது 9 ஆம் இலக்கத்தில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் ஹோட்டலொன்று அல்லது 10 ஆம் இலக்கத்தில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் சிற்றுண்டிச்சாலையொன்று அல்லது அத்தகைய தங்குமனை, ஹோட்டல் அல்லது சிற்றுண்டிச்சாலை 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் கருமங்களுக்காக இலங்கை சுற்றுலாச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது அச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான சந்தர்ப் பத்தில், மேலே 2 ஆம் பகாத்தில் எது எப்படி இருப்பினும் அத்தகைய ஹோட்டல் அல்லது சிற்றுண்டிச்சாலை அல்லது தங்குமனை கொண்டுநடாத்தப்படும் இடத்திற்காக மாநகர சபை ஆணையாளரால் வழங்கப்பட்ட உரிமத்தின் மீது செலுத்தப்படவேண்டிய கட்டணம் அந்த ஹோட்டலின் அல்லது சிற்றுண்டிச்சாலையின் அல்லது தங்குமனையின் 2012 ஆம் ஆண்டுக்கான செலுத்துகையின் ஒரு (1%) சதவீதமாதல் வேண்டும்.

10-888/2

---

**கடுவளை மாநகர சபை**

கைத்தொழில் வரி அமுலாக்கம் - 2013

கடுவெல மாநகர சபையினால் 2012, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி நடத்தப்பட்ட வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5 (1) (i) (අ) 01/ මු/0278 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படு கின்றது.

2013 ஆம் ஆண்டுக்காக அமுலாக்கப்பட்ட இந்த கைத்தொழில் வரி இந்த வருடம் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் கடுவெல மாநகர சபைக்குச் செலுத்த வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கைத்தொழில் வரியைச் செலத்துவதை இலகுவாக்குவதன் பொருட்டு, 2013 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதியிலிருந்து சனவரி 31 ஆந் திகதி வரை வாரத்தின் வேலைநாட்கள், அரச விடுமுறை நாட்கள், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தினங்களில் முற்பகல் 09.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை பத்தரமுல்ல, கடுவெல மற்றும் அத்துருகிரிய ஆகிய மாவட்ட அலுவலகங்கள் திறந்து வைக்கப் பட்டிருக்கும் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

ஜீ. எச். புத்ததாச,
முதல்வர்,
கடுவளை மாநகர சபை.

கடுவளை மாநகர சபை அலுவலகம்,
கடுவளை,
2012, செத்தெம்பர் 28.

**பிரேரணை**

"252 ஆவது அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 247ஆ பிரிவின் கீழ் மாநகர சபைகளுக்கு கிடைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம், அக்கட்டளைச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் தயாரிக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியின் ஒழுங்குவிதிகளின் கீழ் உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளாத ஏதேனும் கைத்தொழிலொன்று, கடுவெல மாநகர சபை அதிகார பிரதேசத்தில், 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அத்தகைய கைத்தொழில் மேற்கொள்ளப்படும் இடத்தின் வருடாந்த பெறுமதி இங்கு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின் I ஆம் நிரையில் உள்ள அளவுகளில் நிலவும் சந்தர்ப்பத்தில், அட்டவணையின் II ஆம் நிரையில் நேரொத்ததாகக் காட்டப்பட்டுள்ள பணத்தொகையின் அளவுக்கு அமைந்ததுமான கைத்தொழில் வரியொன்றை 2013 ஆம் ஆண்டுக்காக அமுலாக்கி அறவிடுவதற்கும், அத்தகைய கைத்தொழில் வரியின் கீழ் சகல ஆட்களும், அத்தகைய கைத்தொழில் வரியை 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் கடுவெல மாநகர சபைக்குச் செலுத்த வேண்டுமெனவும் கட்டளை பிறப்பிக்க கடுவெல மாநகர சபை பிரேரிக்கின்றது."

**அட்டவணை**

| நிரை I வருடாந்த பெறுமதி | நிரை II செலுத்த வேண்டிய வரி ரூபா ச. |
|---|---|
| 1. ரூ. 1,500 ஐ விஞ்சாதவிடத்து | 2,000 0 |
| 2. ரூ. 1,500 ஐ விஞ்சிய ஆனால் ரூ. 2,500 ஐ விஞ்சாதவிடத்து | 3,000 0 |
| 3. ரூ. 2,500 ஐ விஞ்சுமிடத்து | 5,000 0 |

10-888/3

---

**கடுவளை மாநகர சபை**

வியாபார வரி அமுலாக்கம் - 2013

கடுவெல மாநகர சபையினால் 2012, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி நடத்தப்பட்ட வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5 (1) (i) (අ) 01/ මු/0278 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படு கின்றது.

2013 ஆம் ஆண்டுக்காக அமுலாக்கப்பட்டுள்ள வியாபார வரி அந்த ஆண்டின் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் கடுவெல மாநகர சபைக்குச் செலுத்தப்படவேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வியாபார வரியைச் செலுத்துவதை இலகுவாக்குவதன் பொருட்டு, 2013 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதியிலிருந்து சனவரி 31 ஆந் திகதி வரை வாரத்தின் வேலைநாட்கள், அரச விடுமுறை நாட்கள், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தினங்களில் முற்பகல் 09.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை பத்தரமுல்ல, கடுவெல மற்றும் அத்துருகிரிய ஆகிய மாவட்ட அலுவலகங்கள் திறந்து வைக்கப் பட்டிருக்கும் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

ஜீ. எச். புத்ததாச,
முதல்வர்,
கடுவளை மாநகர சபை.

கடுவளை மாநகர சபை அலுவலகம்,
கடுவளை,
2012, செத்தெம்பர் 28.

### பிரேரணை

"252 ஆவது அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 247இ பிரிவின் கீழ், மாநகர சபைகளுக்கு கிடைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம், அக்கட்டளைச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் தயாரிக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியின் ஒழுங்குவிதிகளுக்கமைய உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளல் அல்லது அக்கட்டளைச்சட்டத்தின் 247ஆ பிரிவின் கீழ் ஏதேனும் கைத்தொழில் வரியொன்றைச் செலுத்துதல் அவசியமல்லாததும், மற்றும் தொழில் அல்லாததும் ஏதேனும் வியாபாரமொன்று கடுவெல மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில், 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் அனைத்து ஆட்களிடமிருந்தும், அத்தகைய வியாபாரத்தின் இதற்கு முந்திய ஆண்டில் பெறுகை இங்கு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின் I ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் விடயக்கூற்றின் எல்லைக்குள் நிலவும் பட்சத்தில் அதன் II ஆம் நிரையில் நேரொத்ததாகக் காட்டப்பட்டுள்ள அளவுக்கு அமைய வியாபார வரியொன்றை 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் கடுவளை மாநகர சபைக்குச் செலுத்த வேண்டுமெனவும் கட்டளை பிறப்பிப்பதற்கு கடுவெல மாநகர சபை பிரேரிக்கின்றது."

### அட்டவணை

| நிரை I<br>வரி ஏற்புடைய ஆண்டுக்கு முந்திய ஆண்டில் வியாபாரத்தின் மூலம் கிடைக்கும் அளவு | நிரை II<br>செலுத்த வேண்டிய வரி<br>ரூபா ச. |
|---|---|
| 01.ரூபா 6,000 இனை விஞ்சாதவிடத்து | இல்லை |
| 02.ரூபா 6,000 இனை விஞ்சிய ஆனால் ரூபா 12,000 இனை விஞ்சாதவிடத்து | 90 |
| 03.ரூபா 12,000 இனை விஞ்சிய ஆனால் ரூபா 18,750 இனை விஞ்சாதவிடத்து | 180 |
| 04.ரூபா 18,750 இனை விஞ்சிய ஆனால் ரூபா 75,000 இனை விஞ்சாதவிடத்து | 360 |
| 05.ரூபா 75,000 இனை விஞ்சிய ஆனால் ரூபா 1,50,000 இனை விஞ்சாதவிடத்து | 1,200 |
| 06.ரூபா 1,50,000 இனை விஞ்சாதவிடத்து | 3,000 |

10 - 888/4

---

## கடுவளை மாநகர சபை

### அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீது வரி அமுலாக்கம் - 2013

கடுவளை மாநகர சபையினால் 2012, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி நடத்தப்பட்ட வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5 (1) (i) (அ) 01/ இு/0278 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2013 ஆம் ஆண்டுக்காக அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீதான வரி அந்த ஆண்டின் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் கடுவெல மாநகர சபைக்குச் செலுத்தப்படவேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அபிவிருத்தி செய்யப்படாத காணிகளின் மீதான வரியைச் செலுத்துவதை இலகுவாக்குவதன் பொருட்டு, 2013 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதியிலிருந்து சனவரி 31 ஆந் திகதி வரை வாரத்தின் வேலைநாட்கள், அரச விடுமுறை நாட்கள், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தினங்களில் முற்பகல் 09.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை பத்தரமுல்ல, கடுவெல மற்றும் அத்துருகிரிய ஆகிய மாவட்ட அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கும் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

ஜீ. எச். புத்ததாச,
முதல்வர்,
கடுவளை மாநகர சபை.

கடுவளை மாநகர சபை அலுவலகம்,
கடுவளை,
2012, செத்தெம்பர் 28.

### பிரேரணை

"252 ஆவது அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 247ஈ பிரிவின் (1) ஆவது உப பிரிவிற்கு அமைய மாநகர சபைகளுக்கு கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம், கடுவெல மாநகர சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள ஏதேனும் காணியொன்று கட்டடங்கள் நிர்மானிப்பதற்கு அல்லது நிலையான இல்லையேல் தொடர்ச்சியாக விவசாயம் செய்வதற்கு உகந்தவிடத்து அல்லது நியாயமான செலவில் அந்தக் காணியை அத்தகைய ஏதேனும் கருமமொன்றுக்காக அபிவிருத்தி செய்ய இயலுமானவிடத்து, அவ்வாறான காணியில்.-

(அ) கட்டடங்கள் எதுவும் நிர்மாணிக்கப்படாதவிடத்து ; அல்லது
(ஆ) அந்தக் காணியை முறையாக அல்லது தொடர்ச்சியாக பயிர் செய்கைக்கு உட்படுத்தாதவிடத்து, அல்லது

அத்தகைய காணியை, அபிவிருத்தி செய்யப்படாத காணியொன்றாகக் கருதவும், மற்றும் அத்தகைய அபிவிருத்தி செய்யப்படாத காணியொன்றாகக் கருதப்படும் காணிகளின் மீது 2013 ஆம் ஆண்டுக்காக அத்தகைய ஒவ்வொரு காணியின் மூலதன பெறுமதியின் நூற்றுக்கு தசம் இரண்டு (0.2%) சதவீத வருடாந்த வரியொன்றை அமுல்படுத்தவும், அத்தகைய அபிவிருத்தி செய்யப்படாத காணி மீது வரி 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் கடுவெல மாநகர சபைக்குச் செலுத்த வேண்டுமெனவும் கட்டளை பிறப்பிப்பதற்கு கடுவெல மாநகர சபை பிரேரிக்கின்றது."

10-888/5

---

## கடுவளை மாநகர சபை

### நானாவித கட்டணங்கள் அமுலாக்கம் - 2013

கடுவளை மாநகர சபையினால் 2012, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி நடத்தப்பட்ட வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5 (1) (i) (அ) 01/ இு/0278 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஜீ. எச். புத்ததாச,
முதல்வர்,
கடுவளை மாநகர சபை.

கடுவளை மாநகர சபை அலுவலகம்,
கடுவளை,
2012, செத்தெம்பர் 28.

**பிரேரணை**

*"252 ஆவது அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் மூலம் கடுவளை மாநகர சபைக்கு கிடைத்துள்ள அதிகாரங்கள், கருமங்கள் மற்றும் கடமைகளை அமுல்படுத்துகையில் ஈடேற்றப்படும் கீழே குறிப்பிட்ட பொதுப் பாவனை சேவைகள், நலன்புரி சேவைகள் மற்றும் பிற அதிகாரங்களை நடைமுறைப்படுத்துகையில் அவசியப்படும் இடைநேர்விளைவான கருமங்களை ஈடேற்றுகையில் மாநகர சபை நிதியத்திற்கு அறவிடப்படவேண்டிய கட்டணங்கள் இங்கு அட்டவணையில் குறிப்பிட்டவாறு இருத்தல் வேண்டுமெனவும் இந்த சேவைகளுக்கான கட்டணங்களை அறவிடுதல் 2013, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலாதல் வேண்டுமெனவும் கடுவெல மாநகர சபை பிரேரிக்கின்றது".*

| சேவை | கட்டணம் |
|---|---|
| (i) உறுதிச் சுருக்கத்தை பதிவு செய்தல் மற்றும் உறுதிச் சுருக்க விண்ணப்பப்பத்திரம் | 500 0 |
| (ii) மேலதிக மதிப்பீட்டு அறிவித்தலொன்றை விநியோகித்தல் | 100 0 |
| (iii) கையளிக்கப்படாமைக்கான சான்றிதழ் மற்றும் உரிமை பற்றிய சான்றிதழ் | 150 0 |
| (iv) வீதிக் கட்டுப்பாட்டு எல்லைகள் பற்றிய சான்றிதழ் மற்றும் கட்டட எல்லைகள் பற்றிய சான்றிதழ் | 150 0 |
| (v) காணி உப பிரிவுகளாகப் பிரிப்பதற்கான விண்ணப்பப்பத்திரம் அல்லது கட்டடங்கள் வரைபடத்திட்ட விண்ணப்பப்பத்திரங்கள் | 400 0 |
| (vi) கொம்போஸ்ற் கலம் - கலத்தை கொள்வனை செய்த பெறுமதியின் | 50% |
| (vii) வியாபார நிலையத்தில் இருந்து கழிவுப் பொருட்களை அகற்றுதல் (கழிவுப் பொருட்கள் தொன் ஒன்றுக்கு) | |
| (அ) கழிவுப் பொருட்களை வேறுபடுத்தாது கையளிக்கையில் | 4,500 0 |
| (ஆ) உக்கக்கூடிய கழிவுப் பொருட்களை வேறாகவும் உக்காத கழிவுப் பொருட்களை வேறு வேறாகக் கையளிக்கையில் | 3,000 0 |
| (viii) 1,800 லீற்றர் கலி பவுசரின் (சாக்கடை லொறி) சேவையை வழங்குகையில் அதிகாரப் பிரதேசத்தினுள் (ஒரு தடவைக்கு) | |
| (அ) வீடுசார்ந்த இடம் | 3,150 0 |
| (ஆ) வியாபார நிறுவனம் அல்லது அரச நிறுவனம் | 4,150 0 |
| (இ) கலி பவுசரின் சேவையை வழங்குவதற்காக ஏதேனும் இடத்தை அடைந்த பின்னர் ஏதேனும் வீடொன்றின் சேவையை வழங்க முடியாமற்போகும் சந்தர்ப்பத்தில், அறவிடப்படும் கட்டணத்தில் ரூ. 1,150 ஐ சபை அறவிட்டு மீதி மீளச் செலுத்தப்படும். | |
| (ix) 1,800 லீற்றர் கலி பவசரின் சேவையை வழங்குகையில் அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே (ஒரு தடவைக்கு) | |
| (அ) வீடுசார்ந்த இடம் | 5,150 0 |
| (ஆ) வியாபார நிறுவனம் அல்லது அரச நிறுவனம் | 6,150 0 |
| (இ) அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே உள்ள பிரதேசமொன்றாகக் கருதப்படுவது கொட்டிக்காவத்த - முல்லேரியா பிரதேச சபை, கொலொன்னாவ நகர சபை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை, மஹரகம நகர சபை, ஹோமாகம பிரதேச சபை மற்றும் பியகம பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரப் பிரதேசங் களாவதோடு, அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே சேவை வழங்கும் ஆகக்கூடிய தூரம் கிலோ மீற்றர் 10 ஆகும். | |
| (ஈ) கலி பவுசரின் சேவையை வழங்குவதற்காக ஏதேனும் இடத்தை அடைந்த பின்னர் ஏதேனும் வீடொன்றின் சேவையை வழங்க முடியாமற் போகும் சந்தர்ப்பத்தில், அறவிடப்படும் கட்டணத்தில் ரூபா 2,150 ஐ சபை அறவிட்டு மீதி மீளச் செலுத்தப்படும். | |
| (x) 4,000 லீற்றர் கலி பவுசரின் சேவையை வழங்குகையில் அதிகாரப் பிரசேத்தினுள் (ஒரு தடவைக்கு) | |
| (அ) வீடுசார்ந்த இடம் | 4,400 0 |
| (ஆ) வியாபார நிறுவனம் அல்லது அரச நிறுவனம் | 5,400 0 |
| (இ) கலி பவுசரின் சேவையை வழங்கு வதற்காக ஏதேனும் இடத்தை அடைந்த பின்னர் ஏதேனும் வீடொன்றின் சேவையை வழங்க முடியாமற் போகும் சந்தர்ப்பத்தில், அறவிடப்படும் கட்டணத்தில் ரூபா 1,400 ஐ சபை அறவிட்டு மீதி மீளச் செலுத்தப்படும். | |
| (xi) 4,000 லீற்றர் கலி பவசரின் சேவையை வழங்குகையில் அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே (ஒரு தடவைக்கு) | |
| (அ) வீடுசார்ந்த இடம் | 6,400 0 |
| (ஆ) வியாபார நிறுவனம் அல்லது அரச நிறுவனம் | 7,400 0 |
| (இ) அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே உள்ள பிரதேசமொன்றாகக் கருதப்படுவது கொட்டிக்காவத்த - முல்லேரியா பிரதேச சபை, கொலொன்னாவ நகர சபை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை, மஹரகம நகர சபை, ஹோமாகம பிரதேச சபை மற்றும் பியகம பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரப் பிரதேசங்களாவ தோடு, அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே சேவை வழங்கும் ஆகக்கூடிய தூரம் கிலோ மீற்றர் 10 ஆகும். | |

| சேவை | கட்டணம் |
|---|---|
| (ஈ) கலி பவுசரின் சேவையை வழங்குவதற்காக ஏதேனும் இடத்தை அடைந்த பின்னர் ஏதேனும் வீடொன்றின் சேவையை வழங்க முடியாமற் போகும் சந்தர்ப்பத்தில், அறவிடப்படும் கட்டணத்தில் ரூபா 2,400 ஐ சபை அறவிட்டு மீதி மீளச் செலுத்தப்படும். | |
| (xii) பெலவத்த ஜீ. எச். புத்ததாச விளையாட்டு மைதானத்தை ஒதுக்குதல் | |
| (அ) சங்கீத நிகழ்ச்சி அல்லது களியாட்ட நிகழ்ச்சிக்கு நாளொன்றுக்கு | 10,000 0 |
| (ஆ) விளையாட்டு நிகழ்ச்சிகள் அல்லது பிற கருமங்களின் பொருட்டு நாளொன்றுக்கு | 7,500 0 |
| (இ) கடுவெல மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் அரச பாடசாலைகளின் விளையாட்டு வைபவங்கள் | இலவசம் |
| (ஈ) மேற்காண் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விளையாட்டு மைதானத்தில் ஏற்படக்கூடிய சேதத்தை அறவிடுவதற்கு, விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக்கொள்ளும் போது செலுத்த வேண்டிய மீளச் செலுத்தும் வைப்பு | 5,000 0 |
| (xiii) கடுவெல றொபர்ட் குணவர்தன ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தை ஒதுக்குதல் (நாளொன்றுக்கு) | |
| (அ) ஒலிபெருக்கி வசதி சகிதம் | 4,500 0 |
| (ஆ) ஒலிபெருக்கி வசதியின்றி | 3,000 0 |
| (இ) மேற்காண் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மண்டபத்திற்கு ஏற்படக்கூடிய சேதத்தை அறவிடுவதற்கு, விளையாட்டு மண்டபத்தை ஒதுக்கிக்கொள்ளும் போது செலுத்த வேண்டிய மீளச் செலுத்தப்படும் வைப்பு | 5,000 0 |

மேற்காண் கட்டணங்களுக்கு (மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்பு தவிர்ந்த) மேலதிகமாக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வரிகளும் அறவிடப்படும்.

| | |
|---|---|
| (xiv) நூல்நிலைய அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்பத்திரம் | 15 0 |
| (xv) சடலமொன்றை அடக்கம் செய்வதற்கு | 200 0 |
| (xvi) சடலமொன்றை எரியூட்டுவதற்கு (விறகு மூலம்) (எரிசிதை தயாரிப்பு சடலத்துக்குப் பொறுப்பானவர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்) | 1,500 0 |
| (xvii) சடலத்தை எரியூட்டுவதற்கான எரியூட்டல் கட்டணங்கள் | |
| (அ) 12 வயதுக்குக் குறைந்தவரின் சடலம் (அதிகாரப் பிரசேத்தினுள்) | 2,500 0 |
| (ஆ) 12 வயதுக்குக் குறைந்தவரின் சடலம் (அதிகாரப் பிரசேத்திற்கு வெளியே) | 3,000 0 |
| (இ) முதிர்ந்தவரொருவரின் சடலம் (அதிகாரப் பிரத்தினுள்) | 4,000 0 |
| (ஈ) முதிர்ந்தவரொருவரின் சடலம் (அதிகாரப் பிரசேத்திற்கு வெளியே) | 5,500 0 |

| சேவை | கட்டணம் |
|---|---|
| (xviii) தகன நிலையத்தினுள் ஞாபகார்த்தக் கல் பதித்தல் | |
| தகன நிலையத்தைச் சுற்றியுள்ள சுவரில் ஒதுக்கப்பட்ட இடத்தினுள் | 2,500 0 |
| தகன நிலையத்தில் 2'x 2' அளவிலான இடத்தினுள் | 10,000 0 |
| (xix) தகன நிலையம் இல்லாத தகன வளவில் ஞாபகார்த்தக் கல் பதித்தல் | |
| தகன நிலையத்தைச் சுற்றியுள்ள சுவரில் ஒதுக்கப்பட்ட இடத்தினுள் | 1,000 0 |
| தகன நிலையத்தில் 2'x 2' அளவிலான இடத்தினுள் | 5,000 0 |
| (xx) சர்வதேச வலைப்பின்னல் சேவை வசதிகள் (அரை (1/2) மணி நேரத்திற்கு) | 25 0 |
| நூல்நிலையத்தில் வசிக்கும் கழக உறுப்பினரொருவர் சர்வதேச வலைப்பின்னல் சேவை வசதியைப் பெறுகையில் நாளொன்றுக்கு முதல் (1/2) மணி நேர கட்டணம் இலவசம் | |

10-888/6

---

**கடுவளை மாநகர சபை**

விளம்பர அறிவித்தல்கள் - துணை விதிகள்

கடுவளை மாநகர சபையினால் 2012, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி நடத்தப்பட்ட வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5 (1) (i) (அ) 01/இ/0278 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கடுவளை மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் விளம்பர அறிவித்தல்களைக் காட்சிக்கு வைக்கும் அனைத்து ஆட்களுக்கும் மாநகர சபையினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகளில் XL பிரிவில் "விளம்பர அறிவித்தல்கள்" பற்றிய துணை விதிகளின் நியமங்களுக் கமைய கடுவெல மாநகரசபை ஆணையாளரிடமிருந்து உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும், அவ்வாறின்றி ஏதேனும் வகையில் விளம்பர அறிவித்தலொன்றை கடுவெல மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் காட்சிக்கு வைத்தல் குற்றமொன்றாகுமென மேலும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அவ்வாறே, அத்தகைய விளம்பர அறிவித்தலொன்றை காட்சிக்கு வைப்பதற்காக உரிமமொன்றைக் கோருகையில் மேற்காண் பிரேரணையில் குறிப்பிட்டவாறு கட்டணமொன்றைக் கடுவெல மாநகர சபைக்குச் செலுத்த வேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகின்றது.

ஜீ. எச். புத்ததாச,
முதல்வர்,
கடுவளை மாநகர சபை.

கடுவளை மாநகர சபை அலுவலகம்,
கடுவளை,
2012, செத்தெம்பர் 28.

**பிரேரணை**

*"1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் மூலம் கிடைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மான நடடிவக்கைகள் பற்றிய கௌரவ அமைச்சரால் வரைவு செய்யப்பட்ட 541/17 ஆம் இலக்கமும் 1989.01.20 ஆந் திகதியையும் கொண்ட விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள மற்றும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், மேலே சொல்லப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மூலம் கிடைத்துள்ள அதிகாரத்தின் கீழ் மேல் மாகாண மாகாண சபையால் ஆமோதிக்கப்பட்டமைக்கு 1991, மே மாதம் 21 ஆந் திகதிய 663/5 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மற்றும் 2011, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1732 ஆம் இலக்க வர்த்தமான பத்திரிகையின் மூலம் அறிவிக்கப்பட்டவாறு மாநகர சபையால் அங்கீகரித்த துணைவிதிகளின் XL ஆம் பிரிவில் "விளம்பர அறிவித்தல்" பற்றிய துணைவிதிகளின் 2 ஆம் துணைவிதியில் கடுவெல மாநகர சபைக்குக் கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம், அத்தகைய துணைவிதியின் (3) ஆம் பந்தியுடன் வாசிக்கப்படும் அத்தகைய துணைவிதிகளில் அட்டவணை இங்கு கீழே குறிப்பிட்டவாறு திருத்தஞ் செய்யப்படல் வேண்டுமெனவும், மற்றும் இத்தீர்மானம் 2013, சனவரி மாதம் 01 ஆந் திகதியில் இருந்து அமுலுக்கு வருதல் வேண்டுமெனவும் கடுவெல மாநகர சபை பிரேரிக்கின்றது."*

| விளம்பர அறிவித்தலின் விபரம் | உரிமக் கட்டணம் ஒரு மாதம் அல்லது அதன் பாகத்திற்கு ரூ. ச. | ஒரு வருடத்திற்கு ரூ. ச. |
|---|---|---|
| 01. மேடை நாடகமொன்று அல்லது நாடகமொன்று அல்லது திரைப்பட வசன நிகழ்ச்சியொன்றை அல்லது அவ்வாறல்லாத பிற நிகழ்ச்சியொன்றைப் பற்றி சுவரில் அல்லது அறிவித்தல் பலகையில் காட்சிக்கு வைக்கப்படும் அல்லது தொங்கவிடப்படும் கொடியொன்றை காட்சிக்கு வைக்கும் அல்லது விளம்பர அறிவித்தல் 0.09 வர்க்க மீற்றர் அல்லது அதன் பாகமொன்றுக்கு | 25 0 | 250 0 |
| 02. திரைப்படவசன நிகழ்ச்சியொன்று பற்றி சுவரில் அல்லது அறிவித்தல் பலகையில் காட்சிக்கு வைக்கப்படும் அல்லது தொங்கவிடப்படும் கொடியொன்றை காட்சிக்கு வைக்கும் அல்லது விளம்பர அறிவித்தலில் 0.09 வர்க்க மீற்றர் அல்லது அதன் பாகமொன்றுக்கு | 20 0 | 200 0 |
| 03. மேடை நாடகமொன்று அல்லது நாடகமொன்று அல்லது அது பற்றி சுவரில் அல்லது அறிவித்தல் பலகையில் காட்சிக்கு வைக்கப்படும் அல்லது தொங்கவிடப்படும் கொடியொன்றை காட்சிக்கு வைக்கும் அல்லது விளம்பர அறிவித்தலில் 0.09 வர்க்க மீற்றர் அல்லது அதன் பாகமொன்றுக்கு | 20 0 | 200 0 |
| 04. ஏதேனும் அறிவித்தல் பலகையில் அல்லது அதன் தாங்கியுடன் காட்சிக்கு வைக்கப்படுவதும் எவரேனும் ஆளொருவாரால் எடுத்துச் செல்லும் அல்லது ஓடும் வாகனத்திற்கு அல்லது தள்ளிச் செல்லும் அல்லது இழுத்துச் செல்லும் வண்டிககு பொருத்தப்பட்டுள்ள ஏதேனுமொரு வகையான விளம்பர அறிவித்தலுக்காக, | | |
| (அ) அத்தகைய அறிவித்தல் 0.675 வர்க்க மீற்றரை விஞ்சாத வரை ஒரு வர்க்க மீற்றருக்கு அல்லது அதன் பாகத்திற்கு | 65 0 | 750 0 |
| (ஆ) அத்தகைய அறிவித்தல் 0.675 வர்க்க மீற்றரை விஞ்சுகையில் ஒரு வர்க்க மீற்றருக்கு அல்லது அதன் பாகத்திற்கு | 70 0 | 800 0 |

05 (அ) ஏதேனும் அறிவித்தல பலகையில் இரு பக்கங்களிலும் ஒரே அறிவித்தலை காட்சிக்கு வைப்பின் இரண்டாம் பக்கத்திற்கு ஒரு பக்கத்திற்கான கட்டணத்தின் 25% அறவிடப்படும். இரண்டு பக்கங்களிலும் வெவ்வேறான அறிவித்தல்களைக் காட்சிக்கு வைப்பின் முழுக் கட்டணமும் அறவிடப்படும்.

(ஆ) வீதிப் பெயர் பலகையொன்றை கடுவெல மாநகர சபை சார்ந்த பிரதேசத்தில் காட்சிக்கு வைக்கப்படுவதாயின், அவ்வாறு செய்கையில் நிலத்தின் வாடகையாக மேற்காண் கட்டணத்திற்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு அல்லது அதன் பாகத்திற்கு, ஒரு பலகைக்கு ரூபா 250 0 வீதமும் ஆண்டொன்றுக்கு ரூபா 2,500 0 வீதமும் அறவிடப்படும்.

(இ) விளம்பர அறிவித்தலொன்றுக்கு உரிமத்தைப் பெற்றுக் கொண்ட உரிய காலம் முடிவடைந்ததும் அதனை அகற்றாவிடின் அறிவித்தல் பலகைக்கு ரூபா 500 0 வீதம் மீளச் செலுத்த இயலுமானவாறு கட்டணத்தை சபைக்கு வைப்பிடுதல் வேண்டும்.

(ஈ) மேற்காண் உரிமக் கட்டணத்திற்கு மேலதிகமாக தற்பொழுது நடைமுறையிலுள்ள பெறுமதிசேர் வரி மற்றும் நாட்டைக் கட்டியெழுப்பும் வரியையும் செலுத்துதல் வேண்டும்.

10 - 888/7

## பதுளை பிரதேச சபை

### வரி அறவிடுதல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் கீழ் பதுளை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் முன்னேற்றமடைந்த கிராமங்களாகக் குறிப்பிட்ட வரையறைக்குள் அமைந்துள்ள சகல அசையாத ஆதனங்களினதுமான வருடாந்த பெறுமதியில் நூற்றுக்கு பன்னிரெண்டு (12%) வீதமான வரியாக முறையே 2013, மாச்சு மாதம் 31, யூன் மாதம் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி முடிக்க வேண்டிய விதத்தில் 2013 ஆம் ஆண்டுக்கான வரிகள் விதிக்கப்பட்டுள்ளன என்பதை இதன் மூலம் அறியத்தருகின்றேன்.*

ஆர். எம். யூ. என். சரத்குமார,
தலைவர்,
பதுளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பதுளை,
2012, செத்தெம்பர் 10.

10-893/1

---

## பதுளை பிரதேச சபை

### கட்டணம் விதித்தல் - 2013

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 1619 (அ) பிரிவுக்கு அமைவாக பதுளை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அறவிடப்படுகின்ற வரிகளுக்கு 2013, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2013, திசெம்பர் 31 ஆந் திகதி வரையான வருடத்துக்காக கீழ்க் காணும் வரி விதித்து அறவிடப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

ஆர். எம். யூ. என். சரத்குமார,
தலைவர்,
பதுளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பதுளை,
2012, செத்தெம்பர் 10.

(அ) அனுமதிப்பத்திரங்கள் விநியோகிப்பதற்கான கட்டங்கள் தொடர்பில்-
- (i) அறவிடப்படவேண்டிய வரியின் அல்லது கூலியின் பத்து சதவீதம் (10%)
- (ii) வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புகளுக்கான இடங்கள் தொடர்பில் அறவிடப்படவேண்டிய வரியின் பன்னிரெண்டு சதவீதம் (12%)
- (iii) வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புகளுக்கான இடங்கள் அல்லாத ஆதனங்கள் தொடர்பில் அறவிடப்படவேண்டிய வரியின் பதினைந்து சதவீதம் (15%)

10-893/2

## பதுளை பிரதேச சபை

### காணிகள் விற்றலின் மீது வரி விதித்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் கீழ் பதுளை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஏதாயினும் ஒரு காணி ஏலவிற்பனையாளர், இடைத்தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது உதவிப் பிரதிநிதி போன்ற ஒருவரால் பகிரங்க ஏலத்தில் அல்லது வேறு வகையில் விற்கப்படும் சந்தர்ப்பத்தில், அந்தக் காணியை விற்றதன் மூலம் பெற்றுக்கொண்ட பணத்தின் ஒரு சதவீதம் (1%) வரி 2013 ஆம் ஆண்டில் அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், அப்பணம் விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது உதவிப் பிரதிநிதியால் பதுளை பிரதேச சபைக்குச் செலுத்தப்பட வேண்டும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன். இவ் வரி காணி விற்கப்பட்ட வருட இறுதிக்குள் செலுத்தப்படல் வேண்டும்.*

ஆர். எம். யூ. என். சரத்குமார,
தலைவர்,
பதுளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பதுளை,
2012, செத்தெம்பர் 10.

10-893/3

---

## பதுளை பிரதேச சபை

### வாகனங்கள் நிறுத்தி வைத்தல்

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டங்கள்) கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் கீழ் உள்ளூராட்சி நிறுவன அமைச்சர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 520/7, 1988, ஓகத்து மாதம் 23 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட பொது துணைச் சட்டத்தின் இலக்கம் 06 ஆம் பிரிவின் பிரகாரம் வாகனங்களை நிறுத்தி வைத்தலை பதுளை பிரதேச சபை அங்கீகரிக்கின்றது எனவும், அதன் படி 2006.12.15 ஆந் திகதி 1476 என்ற இலக்கத்தைக் கொண்ட உள்ளூராட்சி நிறுவன வர்த்தமானப் பத்திரிகை மூலம் வெளியிடப்பட்ட முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்கப்படும் இடங்களுக்கு கீழ் கண்டவாறு கட்டணங்கள் அறவிடுவதற்கு 2012.08.29 ஆந் திகதி நடைபெற்ற பதுளை பிரதேச சபைக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது என்பதை இதன் மூலம் அறிவிக்கின்றேன்.*

| | | ரூபா ச. |
|---|---|---|
| பதிவுசெய்வதற்கான கட்டணம் | - | 150 0 |
| நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் (மாதாந்தம்) | - | 60 0 |

ஆர். எம். யூ. என். சரத்குமார,
தலைவர்,
பதுளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பதுளை,
2012, செத்தெம்பர் 10.

10-893/4

## பதுளை பிரதேச சபை

அபிவிருத்தி செய்யப்படாத காணிகளின் மீது வரி அறவிடல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த சபையின் அதிகார எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்காக மூலதனக் காணிப் பெறுமதியின் இரண்டு சதவீத (2%) வரியை 2013 ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கும், அவ்வரியானது 2013, யூலை மாதம் 30 ஆந் திகதிக்கு முன்பதாக செலுத்தப்படவேண்டும் என பதுளை பிரதேச சபை தீர்மானித்துள்ளது என்பதையும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.*

ஆர். எம். யூ. என். சரத்குமார,
தலைவர்,
பதுளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பதுளை,
2012, செத்தெம்பர் 10.

10-893/5
